விலை ரூபா: 10.00

*Registered as a Newspaper in Srilanka*

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: எட்டு

சங்கு 08 வள்ளுவர் ஆண்டு 2038 கார்த்திகை 03 திங்கட்கிழமை (19.11.2007) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 335




# அரசுக்கும் எதிர்க்கட்சிகளுக்குமிடையில் இன்று சபையில் பெரும் பலப் பரீட்சை

## ஜே.வி.பியின் கைகளில் வெற்றி தோல்வி

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்தின் மூன்றாவது வரவு-செலவுத் திட்டத்தின் இரண்டாவது வாசிப்பு மீதான வாக்கெடுப்பு இன்று மாலை நாடாளுமன்றத்தில் இடம்பெறவுள்ளது. வரவு-செலவுத் திட்டத்தினை எப்படியாவது தோற்கடித்து விட வேண்டும் என்ற நோக்கில் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி பெரும் பிரயத்தனத்தினை மேற்கொண்டு வரும் அதேவேளை வரவு-செலவுத் திட்டத்தில் வெற்றி பெற்று விட வேண்டும் என்பதற்காக அரசாங்கம் பகீரதப் பிரயத்தனத்தில் இறங்கியுள்ளது.

(08 ஆம் பக்கம் பார்க்க)

## வாக்கெடுப்பின்போதே எமது நிலைப்பாடு வெளிப்படும்

### என்கிறது ஜே.வி.பி.

(கொழும்பு)

அரசாங்கம் சமர்ப்பித்துள்ள வரவு செலவுத் திட்டத்துக்கான இன்றைய வாக்கெடுப்புத் தொடர்பில் கட்சி தீர்க்கமான முடிவொன்றினை எடுத்துள்ளது.

வாக்கெடுப்பின் போதே எமது நிலைப்பாடு வெளிப்படும் என்றும் ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினரும் கட்சியின் சர்வதேச விவகாரங்களுக்கான பொறுப்பாளருமான விஜித்த ஹேரத் நேற்றுத்

(08 ஆம் பக்கம் பார்க்க)

## அரசுடன் இணைந்திருந்தாலும் கள நிலைவரத்தை பொறுத்தே முடிபு

### இ.தொ.க., மு.கா.,ம.ம.மு. அறிவிப்பு

(கொழும்பு)

அரசாங்கத்தில் அங்கம் வகித்தாலும் வரவு செலவுத்திட்ட வாக்கெடுப்பு தொடர்பில் களநிலைவரங்களை அவதானித்தே முடிபு எடுக்கப்படும் என்று இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ், மலையக மக்கள் முன்னணி ஆகிய கட்சிகள் தெரிவித்துள்ளன.

வரவு செலவுத் திட்டத்தின் இன்றைய வாக்கெடுப்பு தொடர்பில் இக்கட்சிகளின் தலைவர்கள்

(08 ஆம் பக்கம் பார்க்க)

## வரவு–செலவுத் திட்டத்தினை 22 எம்.பிக்களும் எதிர்ப்போம்

### கூட்டமைப்பு அறிவிப்பு

(கொழும்பு)

வரவு–செலவுத் திட்டத்தினைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 22 எம்.பிக்களும் எதிர்த்து வாக்களிப்பது உறுதி. இதற்கான உறுதியான முடிபு எடுக்கப்பட்டுள்ளது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் என்.ஸ்ரீகாந்தா தெரிவித்தார்.

இன்று நடைபெறவுள்ள வரவு–செலவுத் திட்டம் மீதான வாக்கெடுப்பில் சகல

(08 ஆம் பக்கம் பார்க்க)

## ஜே.வி.பி.எதிர்த்தாலும் வெற்றி பெறுவோம்

### அரசாங்கம் அறிவிப்பு

(கொழும்பு)

ஜே.வி.பி. எதிர்த்து வாக்களித்தாலும் அதிகப்படியான வாக்குகளைப் பெற்று அரசாங்கம் வரவு -செலவுத் திட்டத்தில் வெற்றி பெறும். இதில் எந்தவிதமான சந்தேகமும் இல்லை என்று அரசாங்கத்தின் பிரதம கொறடாவும் அமைச்சருமான ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது, இன்று

(08 ஆம் பக்கம் பார்க்க)

## வரவு-செலவுத் திட்டம் இன்று சபையில் தோற்கடிக்கப்படும்

### ஐக்கிய தேசியக் கட்சி நம்பிக்கை

(கொழும்பு)

நாடாளுமன்றத்தில் இன்று வாக்கெடுப்புக்கு விடப்படும் வரவு செலவுத் திட்டம் தோற்கடிக்கப்படுவது உறுதியாகிவிட்டது. இதற்கான சகல நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் அரசாங்கத்தை கவிழ்த்து பொதுத்தேர்தலை நடத்துவதற்கு வழிவகுக்கப்படும் என்று கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க தெரிவித்தார்.

வரவு செலவுத்திட்டத்திற்கு எதிராக வாக்களிப்பதற்கு

(08 ஆம் பக்கம் பார்க்க)

## அரசாங்கம் அறிவிப்பு

(கொழும்பு)

ஜே.வி.பி. எதிர்த்து வாக்களித்தாலும் அதி கப்படியான வாக்குகளைப் பெற்று அரசாங் கம் வரவு -செலவுத் திட்டத்தில் வெற்றி பெறும். இதில் எந்தவிதமான சந்தேகமும் இல்லை என்று அரசாங்கத்தின் பிரதம கொறடாவும் அமைச்சருமான ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது, இன்று (08 ஆம் பக்கம் பார்க்க)

## ஐக்கிய தேசியக் கட்சி நம்பிக்கை

(கொழும்பு)

நாடாளுமன்றத்தில் இன்று வாக்கெடுப்பு க்கு விடப்படும் வரவு செலவுத் திட்டம் தோற் கடிக்கப்படுவது உறுதியாகிவிட்டது. இதற்கான சகல நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் அரசாங்கத்தை கவிழ்த்து பொதுத்தேர்தலை நடத்துவதற்கு வழிவகுக் கப்படும் என்று கொழும்பு மாவட்ட நாடாளு மன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க தெரி வித்தார்.

வரவு செலவுத்திட்டத்திற்கு எதிராக வாக்க ளிப்பதற்கு (08 ஆம் பக்கம் பார்க்க)

# தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் எம்.பிக்களுக்கு உயிர் அச்சுறுத்தல்

## விடுதலைப் புலிகள் நோர்வேயிடம் முறையீடு

(கிளிநொச்சி)

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு நாடாளு மன்ற உறுப்பினர்களின் உயிர்களுக்கு அச் சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாக விடுதலைப் புலி கள் நோர்வேயிடம் முறைப்பாடு செய்துள் ளனர்.

நேற்றுக் காலை இலங்கைக்கான நோர் வே தூதுவர் ரொறெ ஹற்றெம் மற்றும் இலங் கைப் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு வின் தலைவர் லார்ஸ் ஜொகான் சொல்பேர்க் ஆகியோருக்கு தொடர்புகளை ஏற்படுத்திய விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலகப் பணிப்பாளர் சீ.புலித்தேவன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்கு ஏற்பட்டுள்ள உயிர் ஆபத்துக்கள் குறித்து விளக்கமளித்துள் ளார்.

இந்த விடயத்தில் தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் (08 ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவத் தளபதி வவுனியாவுக்கு விஜயம்

(வவுனியா)

வவுனியா கூட்டுப்படைத் தலைமையகத் தில் பாதுகாப்பு நிலைமைகள் தொடர்பாக இராணுவத் தளபதி சரத் பொன்சேகா நேற்று முன்தினம் ஆய்வு செய்தார்.

கொழும்பிலிருந்து வான்படையின் உலங்கு வானூர்தியில் வன்னி கூட்டுப்படைத் தலை மையகத்தை சென்றடைந்த சரத் பொன் சேகா உள்ளிட்ட குழுவினரை, வன்னிக்கான இராணுவக் கட்டளைத் தளபதி மேஜர் ஜென ரல் ஜகத் ஜயசூரிய (08 ஆம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பு எம்.பிக்கள் இருவரின் பொலிஸ் பாதுகாப்பு விலக்கப்பட்டது

(கொழும்பு)

மட்டக்களப்பு மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருவரது மட்டக்களப்பு இல்லங்களுக்கு வழங்கப்பட்டிருந்த பொலிஸ் பாதுகாப்பு நேற்று ஞாயிற்றுக்கிழமை மாலையுடன் எதுவித முன்னறிவிப்புமின்றி நீக்கப்பட்டுள்ளதாகத் தகவல் கள் வெளியாகியுள்ளன.

நாடாளுமன்ற உறுப்பினர்களான பி.அரியநேந்திரன் மற்றும் தங்கேஸ்வரி கதிர்காமன் ஆகியோரின் இல்லங்களுக்கு வழங்கப்பட்டிருந்த (08 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.-கொழும்பு விமான சேவைகள் தற்காலிகமாக இடைநிறுத்தம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.-கொழும்பு விமான சேவைகள் நேற்று முதல் தற்காலிகமாக இடை நிறுத்தப்பட்டுள்ள தாக அறிவிக்கப்பட்டுள்ளது. நேற்றுக் காலை முதலாவது சேவைகள் மேற்கொள்ளப் பட்ட போதும் ஏனைய சேவைகள் எவையும் இடம்பெறவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

இரண்டாவது விமான சேவைக்குப் பயணச் சீட்டைப் பெற்றுக் கொண்ட பயணிகள் பலாலி வரை கொண்டு செல்லப்பட்ட போதும் பின்னர் திருப்பி அனுப்பப்பட்டனர். விமான சேவைகள் நிறுத்தப்பட்டமைக்கான காரணம் எதுவும் கூறப்படவில்லை. (ச)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# கட்சித் தாவல்களால் தோன்றியுள்ள நிச்சியமற்ற அரசியல் எதிர்காலம்

(கொழும்பு)

யாலப் பகுதியில் ஊடுருவியுள்ள 30 தமிழீழ விடுதலைப்புலிகளைப் பிடிப்பதற்காக 3 ஆயிரம் படையினரை ஜனாதிபதி அனுப்பியுள்ளதன் மூலம் அதன் அரசியல் தாக்கம் என்ன என்பதை அறியக் கூடியதாகவுள்ளது என்று லக்பிம தனது பாதுகாப்பு ஆய்வில் தெரிவித்துள்ளது.

அச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

மக்கள் எதிர்பார்க்காதவாறு இருதரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களும் கட்சி தாவி வருவதால் இலங்கை ஒரு நிச்சியமற்ற அரசியல் எதிர்காலத்திற்குள் உள்நுழைந்துள்ளது. அரசாங்கத்திற்கும் எதிர் தரப்பினருக்கும் இடையில் நடைபெறும் அரசியல் போர் வட பகுதி களத்தில் நடப்பதை விட உக்கிரமடைந்துள்ளது.

வரவு-செலவுத் திட்டத்திற்கு ஆதரவு வழங்குவதற்கு அரசின் ஆதரவுக் கட்சியான ஜே. வி.பி. 4 நிபந்தனைகளை விதித்துள்ளது. போர் நிறுத்தத்தை இரத்துச் செய்தல், அனைத்துக் கட்சிக் குழுவைக் கலைத்தல், ஐ.நா. அதிகாரிகளின் வரவைத் தடுத்தல் போன்ற நிபந்தனைகள் எதுவும் வரவு-செலவுத் திட்டத்துடன் தொடர்புடையன அல்ல.

ஆனால் ஏற்கனவே காகிதத்தில் உள்ள போர் நிறுத்த உடன்பாட்டிலிருந்து விலகுவதாக வெளிப்படையாக அறிவிப்பதும் அனைத்துக் கட்சிக் குழுவைக் கலைப்பதும் அரசின் கொள்கைகளில் மாற்றங்களை ஏற்படுத்தும். இது அரசின் இராணுவ உத்திகளிலும் சிக்கல்களை உருவாக்கும்.

விடுதலைப்புலிகளுக்கு எதிரான போரே அரசின் துரும்புச் சீட்டு. 'படையினர் ஜனாதிபதியில் தங்கியிருப்பதுண்டு. ஆனால் ஜனாதிபதி படையினரில் தங்கியிருக்கும் நிலையே இங்கு உருவாகியுள்ளதாக' ஒரு மூத்த படைஅதிகாரி தெரிவித்துள்ளார்.

அரசின் படை நடவடிக்கைகள் எல்லாம் எப்போதும் சரியாகவும் பெரிய வெற்றிகரமாகவும் அமைவதில்லை. படை நடவடிக்கையுடன் சேர்ந்து மேற்கொள்ளப்படாத அரசியல் நடவடிக்கைகள் படை நடவடிக்கைகளில் எதிர்பார்த்த விளைவுகளை ஏற்படுத்தாது.

அண்மையில் மேற்கொள்ளப்பட்ட படை நடவடிக்கை குறித்து அரசு மகிழ்ச்சியிலிருந்த போது யால வனவிலங்கு சரணாலயப் பகுதிக்குள் விடுதலைப்புலிகள் ஊடுருவியது அதிர்ச்சிகரமானது.

விடுதலைப்புலிகளின் உத்திகள் தெளிவானது. அவர்கள் மகிந்த ராஜபக்ஷவின் மாவட்டத்திற்கே போரைக் கொண்டு சென்றுள்ளதாகக் காண்பித்துள்ளனர். விடுதலைப்புலிகள் யாலப் பகுதியில் ஊடுருவியது ஓர் உளவியல் நடவடிக்கையாகும். இதனால் தென் பகுதி மக்களிடம் தோன்றியுள்ள உளவியல் பாதிப்புக்கள் கணிசமானதே. அரசியல் பாதிப்புக்களும் அதிகம்.

வன்னியிலுள்ள படையினரில் கணிசமானவர்களைத் திஸ்ஸ மகாராம நோக்கித் திருப்புவதும் விடுதலைப்புலிகளின் உத்தி. 3 பட்டாலியங்களைச் சேர்ந்த ஆயிரம் படையினர் யாலப் பகுதியில் பாதுகாப்பில் ஈடுபடுத்தப்படவுள்ளனர். 500 படையினர் ஏற்கனவே அங்கு அனுப்பப்பட்டுள்ளனர். அங்கு ஏற்கனவே பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ள ஆயிரம் பொலிஸார் மற்றும் ஆயிரம் ஊர்காவற் படையினருக்கு மேலதிகமாக இந்த ஆயிரம் படையினர் அங்கு அனுப்பப்படவுள்ளனர்.

அந்தப் பகுதியில் ஊடுருவிய 30 விடுதலைப்புலிகளைச் சமாளிப்பதற்கு இவ்வளவு தொகை படையினர் ஈடுபடுத்தப்படவுள்ளனர். அம்பாந்தோட்டை மாவட்டத்தின் கட்டளை அதிகாரியாக பிரிகேடியர் சுனந்த ரணசிங்க கடந்த வாரம் நியமிக்கப்பட்டுள்ளார்.

யாலப் பகுதிக்குள் விடுதலைப்புலிகள் ஊடுருவியது ஆச்சரியமானதொன்றல்ல. ஏனெனில் அவர்களுக்கு விநியோகங்கள் மற்றும் தேவைகள் மிகவும் குறைவானது. அவர்கள் சிறப்பு நடவடிக்கைக் குழுவினர்.

எனவே இந்தக் குழு பதுங்கித் தாக்குதல்களையே அதிகம் மேற்கொள்ளும். எனவே தான் தல்கஸ்மன்கடப் பகுதியில் அமைந்திருந்த படையினர் மீதான தாக்குதலின் போது அங்கிருந்த பொருள்களையும் விடுதலைப் புலிகள் எடுத்துச்சென்றிருந்தனர்.

மற்றுமொரு சம்பவத்தில் ரிடிதென்னப் பகுதியிலுள்ள வீடு ஒன்றுக்குச் சென்ற 3 ஆயுதம் தாங்கிய நபர்கள் பிஸ்கெட்டுக்களையும் தேநீரும் பெற்றுச் சென்றதாகத் தெரிவிக்கப்படுகின்றது. யாலப் பகுதிக்கு மிகவும் அதிகளவில் படையினர் அனுப்பப்பட்டது அதன் அரசியல் முக்கியத்துவத்தை எடுத்துக் காட்டியுள்ளது.

வடகள முனையில் அசாதாரண அமைதி நிலவுகின்றது. பத்து நாள்களுக்கு முன்னரே முகமாலையில் கடும்சமர் நடைபெற்றிருந்தது. இதில் படையினரின் வான் நகர்வு பிரிகேட் மற்றும் சிறப்புப் படை அணிகள் பங்குபற்றியிருந்தன. இதனைத் தொடர்ந்து படையினர் தற்போது மட்டுப்படுத்தப்பட்ட நடவடிக்கைகளில் ஈடு பட்டு வருகின்றனர்.

இதனிடையே வவுனியா விலுள்ள ராடர் திரைகளில் விடுதலைப்புலிகளின் விமானங்கள் கடந்த புதன்கிழமை அவதானிக்கப்பட்டுள்ளது.

அதனைத் தொடர்ந்து கொழும்பு நகரில் மின்சாரம் துண்டிக்கப்பட்டதுடன் படையினரும் உசார்படுத்தப்பட்டனர். 25 கி.மீ. வரை வானில் அடையாளம் காணப்படாத விமானங்கள் பறந்ததை ராடர்களில் அவதானித்துள்ளதாகப் படை அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

ராடர்களில் ஏதும் பிரச்சினையா? என்பது தொடர்பில் தெளிவில்லாமல் இருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். ராடரில் வெளிநாட்டு விமானங்கள் அவதானிக்கப்பட்டதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றபோதும் அதனை உறுதிப்படுத்த முடியவில்லை.

வரவு-செலவுத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு அரசு போராடி வருகின்றது. எனவே அதன் விளக்கங்களில் உண்மையை அறிவது கடினம். வான் படையினர் ஒத்திகைகளை நடத்தியதாக ரம்புக்வெல தெரிவித்தார். ஆனால் ராடர் திரைகளில் அவதானிக்கப்பட்டது தொடர்பாக அவர் எதுவும் கூறவில்லை என அதில் தெரிவிக்கப்பட்டது.

# "மகா நெகுமா" திட்டப்பணிப்பாளரிடம் அநு'தாக்குதல் தொடர்பாக விசாரணை

அநுராதபுரம் வான் படைத்தளம் மீதான விடுதலைப் புலிகளின் தாக்குதல் குறித்து 'மகா நெகுமா' திட்டத்தின் பணிப்பாளரான கீத் சிறி அபயகுணவர்த்தனவிடம் குற்றப் புலனாய்வுத்துறையினர் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

இது தொடர்பில் கொழும்பு ஊடகம் வெளியிட்டுள்ள செய்தி விபரம் வருமாறு,

அநுராதபுரம் வான்படைத்தளத்தின் விரிவாக்கத்தில் பணியாற்றிய ஒப்பந்தக்காரர்கள் அவர்களின் துணை ஒப்பந்தக்காரர்கள் தொடர்பாக கவனத்தில் கொள்ளவில்லை. அவர்களே விடுதலைப் புலிகளுக்கு முக்கிய தகவல்களை வழங்கியிருக்கலாம்.

கூகிள் இணையத்தளத்தின் மீதே வான் படையினரும் குற்றப் புலனாய்வுத் துறையினரும் குற்றம் சுமத்தி வருகின்றனர். வீதி அபிவிருத்தி அமைச்சின் இணைப்புச் செயலாளரினால் இந்த நடவடிக்கையில் 164 பணியாளர்களும் 94 வாகனங்களும் பயன்படுத்தப்பட்டிருந்தன. வீதி அபிவிருத்தி அமைச்சின் இணைப்புச் செயலாளர் கைது செய்யப்படலாம் என கடந்த வாரம் எதிர்பார்க்கப்பட்டது.

எனினும் குற்றப் புலனாய்வுத் துறையினரும் ஜனாதிபதி பாதுகாப்பு பிரிவினரும் மகா நெகுமா திட்டத்தின் பணிப்பாளரான கீத் சிறி அபயகுணவர்த்தனவை விசாரணை செய்திருந்தனர்.

அவர் மகிந்த ராஜபக்ஷவின் கீழ்வரும் தேசியக் கட்டுமான அமைச்சின் வேலைகளின் இணைப்பதிகாரியாவார். அவரிடமே அநுராதபுரம் வான் படைத்தளத்தின் விரிவாக்கத் திட்டம் ஒப்படைக்கப்பட்டிருந்தது.

ஏ.என்.ரி. போக்குவரத்து நிறுவன முகவரான ஏ.என். தனநாயகம் என்பவரை அபய குணவர்த்தனவுக்கு தெரியும். தனநாயகம் வன்னிப் பகுதிக்கு பொருட்களை அனுப்புபவர். அபய குணவர்த்தனவுக்கு மட்டக்களப்பைச் சேர்ந்த பிரதீபனை, தனநாயகம் அறிமுகப்படுத்தியிருந்தார். பிரதீபனுக்கு விடுதலைப் புலிகளுடன் தொடர்புகள் உண்டு. பிரதீபனிடம் இருந்து ஒரு மில்லியன் ரூபாய்கள் பெறப்பட்டதுடன் அவருக்கு உப ஒப்பந்தமும் வழங்கப்பட்டது.

அபய குணவர்த்தனவுக்கும் தனநாயகத்திற்கும் இரவு விடுதிகளுக்குச் செல்லும் பழக்கமுண்டு. இந்த நிலையில் அத்துரு கிரிய மிலேனியம் சிற்றி முகாமைச் சேர்ந்த ஒருவர் நண்பரானார்.

விடுதலைப் புலிகள் அமைப்பைச் சேர்ந்தவரே கருணா குழுவினர் என்ற போர்வையில் அபய குணவர்த்தனவிடம் வாகனச் சாரதியாக சேர்ந்திருந்ததாக பின்னர் அறியப்பட்டிருந்தது. லெஸ்லி அலெக்சாண்டர் சேக்ஸ்பியர் என்ற பெயருடைய அந்த நபர் அபய குணவர்தனவின் பிக்கப் வாகனத்தின் சாரதியாக பணியாற்றி வந்தார்.

வவுனியாவுக்கான மூன்று பயணங்களின் போது அவர் தனது வாகனத்தை சோதனையிட அனுமதிக்காதது இராணுவ புலனாய்வுத் துறையினருக்கு சந்தேகத்தை தோற்றிவித்திருந்தது. அபய குணர்த்தனவுடன் பணியாற்றுவதாக அவர் வீதிச் சோதனைச் சாவடிகளில் தெரிவித்திருந்தார்.

வீதி அதிகார சபையிடம் மூன்று வாகனங்கள் இருந்ததுடன் அவை பின்னர் மறைந்து போய் விட்டன. மஸ்டா 323 என்ற வாகனம் அரச கட்டுப்பாடற்ற பகுதிக்கு எடுத்துச் செல்லப்பட்டு ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய்களுக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது.

நிசான் சன்னி என்ற வாகனமும் விடுதலைப் புலிகளின் கட்டுபாட்டுப் பகுதிக்கு எடுத்துச் செல்லப்பட்டிருப்பது விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இசூசு பிக்கப் வகை வாகனம் ஒன்றும் காணாமல் போனதுடன் பின்னர் அது கண்டு பிடிக்கப்பட்டது. கேணல் மீடினின் கொலையுடன் தொடர்புடைய ஜஸ் மஞ்சு, கீர்த்தி பண்டார உள்ளிட்ட 11 பேர், வீதி அதிகார சபையில் பணியாற்றியுள்ளனர்.

அபய குணவர்த்தனவுக்கு மகிந்த ராஜபக்ஷவுடன் தொடர்புகள் உண்டு. முன்னாள் ஜனாதிபதி பிரேமதாஸவின் கொலையில் சம்பந்தப்பட்ட பாபுவுக்கு பிரேம தாஸவுடன் நெருங்கிய தொடர்புகள் இருந்தது குறிப்பிடத்தக்கது.

பொதுமக்களுடன் மகிந்தவின் தொடர்புகள் அதிகமாக இருப்பதனால் அவர் இலகுவாக தாக்குதலுக்கு உள்ளாகலாம். இது தொடர்பான புலனாய்வுத் தகவல்கள் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து ஜனாதிபதி மாளிகைக்கு அருகில் இருந்த பொதுமக்கள் தொடர்பகம், பணிப்பாளர் நாயகம் வஜிர இருகல் பண்டாரா ஆகியன மூடப்பட்டுள்ளன.

எனினும் அதற்கு அண்மையில் உள்ள அலுவலகங்கள் வேறு இடத்திற்கு மாற்றப்பட்டுள்ளனவா என்பது தொடர்பாக தெளிவாக தெரியவில்லை என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-5)

# வடபோர் முனைகளுக்கு புதிய தளபதிகள் நியமனம்

வடபோர் முனையில் நிறுத்தப்பட்டிருக்கும் இராணுவப் படையணிகளில் புதிய நியமனங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இது தொடர்பில் வெளியான செய்தி வருமாறு,

59 ஆவது படையணியின் கட்டளைத் தளபதியாக பிரிகேடியர் நந்தா உடுவத்த (கவசப் படைப்பிரிவைச் சேர்ந்தவர்) நியமிக்கப்பட்டுள்ளார். 51 ஆவது படையணியின் 2 ஆவது பிரிகேட்டின் கட்டளைத் தளபதியான பிரிகேடியர் பி.டபிள்யூ.பி.ஜெயசுந்தர (பீரங்கிப் படைப்பிரிவைச் சேர்ந்தவர்) மணலாற்றின் பிரதிக் கட்டளைத் தளபதியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

51 ஆவது படையணியின் 2 ஆவது பிரிகேட்டின் கட்டளைத் தளபதியாக லெப்.கேணல் சி.கே.கோஸ்ரா நியமிக்கப்பட்டுள்ளார்.

பிரதிக் கட்டளைத்தளபதிகள் டிவிசன் படைகளுக்கு நியமிக்கப்படுவது இதுவே முதற்தடவையாகும்.

முகமாலை, வவுனியா பகுதிகளில் நிலைகொண்டுள்ள படையினருக்கும் பிரதிக் கட்டளைத் தளபதிகள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

52 ஆவது படையணியின் 3 ஆவது பிரிகேட்டின் கட்டளைத் தளபதியான பிரிகேடியர் எஸ்.பி.ரி.லியனகே (கவசப் படையைச் சேர்ந்தவர்) முகமாலையில் நிலைகொண்டுள்ள 55 ஆவது படையணியின் பிரதிக் கட்டளைத் தளபதியாகவும் யாழ்.குடாநாட்டின் இராணுவத்தின் அதிகாரிகள் பணியக அதிகாரியான பிரிகேடியர் இசற் விக்கிரமரட்ண (பீரங்கிப் படையணியைச் சேர்ந்தவர்) வவுனியாவில் நிலைகொண்டுள்ள 57 ஆவது படையணியின் பிரதிக் கட்டளைத் தளபதியாகவும் நியமிக்கப்பட்டுள்ளார்.

இசற் விக்கிரமரட்ணாவின் இடத்திற்கு படையினரின் சமிக்ஞை பிரிவில் பணியாற்றிய கேணல் ஏ.ஆர்.றொவலும், பிரிகேடியர் லியனகேயின் இடத்திற்கு லெப்.கேணல் பி.ஐ.பத்திரன (கெமுனுவோச்) ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இராணுவம் தனது திட்டங்களின் அடிப்படையில் செயலாற்றி வருகின்றது. ஆயிரக்கணக்கான படையினர் பல முனைகளில் களங்களில் திறக்கலாம். தற்போதைய பருவ மழையினால் படையினர் தமது கவசப் படையை பயன்படுத்த முடியாதுள்ளது. ஆனால் பருவ மழை முடிபடைந்ததும் படையினர் தம்மிடமுள்ள முழுவளத்தையும் பயன்படுத்தி வன்னி மீதான தாக்குதலை தொடங்கலாம்.

கடந்த நவம்பர்மாதம் 7 ஆம் திகதி முகமாலையில் நடைபெற்ற கடும் சமரில் அழிவுகள் ஏற்பட்ட போதும் படையினரின் மட்டுப்படுத்தப்பட்ட படை நடவடிக்கைகள் தொடர்கின்றன. எனினும் படையினரின் நடவடிக்கைகளுக்கு அப்பால் விடுதலைப் புலிகள் யாழ்.குடாநாட்டிலுள்ள சில பகுதிகளில் தாக்குதல்களை மேற்கொள்ளலாம் எனவும் நம்பப்படுகின்றது. இதனை தடுப்பதற்கான முயற்சிகளை யாழ். மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி மேற்கொண்டுள்ளார். (எ-5)

# இன்று ஒரு தகவல்

## உணர்வுகள் பத்து!

"சார்... அன்று உங்களிடம் ரொம்ப உணர்ச்சி வசப்பட்டுப் பேசிவிட்டேன்... அதைப் பெரிதாக எடுத்துக் கொள் ளாதீர்கள்..." என்றார் ஒருவர். "நீங்கள் உணர்ச்சி வசப் படுவதே ரொம்ப அபூர்வம்! அதற்காகச் சந்தோஷப் படுகிறேன் சார்" என்றேன் நான். "என்ன அப்படிச் சொல்கிறீர்கள்...? என்றார் அவர்." உங்களை உணர்ச்சியில்லாத மரக்கட்டை என்று தானே நமது நண்பர்கள் சொல்வது வழக்கம் என்றேன்.

மனிதனுக்கு ஏற்படுகிற உணர்வுகள் Emotion இருக்கிறதே அதில் சில நல்லது செய்யும். Positive Emotion சில தொந்தரவு செய்யும். Destructive Emotion ஆக இந்த இரண்டு வகைகளில் ஒன்று நல்லது. மற்றொன்று கெட்டது. உதாரணத்துக்கு–கோபம் நோயை உண்டாக்கும். சிரிப்பு நோயைக் குணப்படுத்தும். உணர்வுகள் இல்லாமல் மனிதன் சந்தோஷமாக இருக்கமுடியாது. நமது வாழ்க்கையை ஆட்சிசெய்வதே அதுதான்.! நீங்கள் உங்கள் வாழ்க்கையிலே சந்தோஷமாக இருக்கப்போகிறீர்களா அல்லவா என்பதை முடிவு செய்வது உங்கள் உணர்வுகள் தான். எல்லாவற்றையும் விட உங்கள் உடல் நலத்தை நிர்ணயம் செய்வதும் அதுதான்.

மொத்தம் 10 அடிப்படையான உணர்ச்சிகள் உண்டு. அதில் 5 மோசமானது. 5 நல்லவிதமானது. மோசமான உணர்ச்சிகளை எப்படிக் கட்டுப்படுத்துவது? நல்லவிதமான உணர்ச்சிகளை எப்படி வலுப்படுத்துவது? என்பதுதான் இன்றைய தகவல்.

மோசமான உணர்ச்சிகள் எது தெரியுமா? கோபம்–குற்றஉணர்வு–பயம்–சலிப்பு–துக்கம். நல்ல விதமான உணர்ச்சிகள் சிரிப்பு–அன்பு–ஆக்கபூர்வமான எதிர்பார்ப்பு–நம்பிக்கை–தன்னம்பிக்கை. முதலில் குறிப்பிட்ட ஐந்தும் உடம்புக்குக் கெடுதல். பின்னர் குறிப்பிட்ட ஐந்தும் உடம்புக்கு நல்லது. அவற்றை ஒவ்வொன்றாகப் பார்ப்போம்.

முதலாவது கோபம்–இதயநோயை உண்டாக்கும். கோபத்தை அ டக்கும்போது இரத்த அழுத்தம்–B–P ஏறுகிறது Heart attack, stroke வருகிறது. வயிற்றில் அல்சர் உண்டாகுகிறது. எந்தக் காரணத்தினாலே கோபம் வந்தாலும் சரி–அது மனதைக் கெடுக்கும். உடம்மையும் கெடுக்கும். இரண்டாவது குற்ற உணர்வு Guilt ஒரு தப்புச் செய்தால் அல்லது ஒரு காரியத்தைச் செய்யத்தவறினால் அதை நினைத்து வருத்தப்படுகிறோம். தன்னம்பிக்கையை வளர்த்துக்கொள்வதும் தவறு செய்யாமல் இருக்கப் பழகிக்கொள்வதும் தான் இதற்குச் சரியான வழி. மூன்றாவது பயம்–எது எதுக்குப் பயப்படுவது என்றில்லாமல் எல்லாவற்றுக்கும் பயப்படுகிறோம். நாமும் நமது உடம்பும் நன்றாக இருக்க வேண்டுமென்பது எல்லாருக்கு முள்ள பொதுவான பயம். பயத்துக்கான மூல காரணத்தை கண்டு பிடிக்க வேண்டும். பின் அதை விலக்க வேண்டும். "அஞ்சி யஞ்சிச் சாவார்–அவர் அஞ்சாத பொருளில்லை அவனியிலே என்று பாரதியாரும் பயத்துக்கு விளக்கம் தருகிறார் நாலாவது சலிப்பு சிலருக்கு நேரம் கிடைக்கவில்லையென்பது ஒரு பெரிய குறையாக இருக்கும். ஆனால் சிலருக்கு நேரம் இருக்கும். என்ன செய்வது என்று தெரியாமல் இருக்கும். இது ரொம்ப ஆபத்தானது. ஐந்தாவது–துன்பம், துயரம் அல்லது துக்கம்! மனிதன் வருத்தப்படுவதற்கு எத்தனையோ காரணங்கள் இருக்கின்றன. துக்கத்தைக் கண்டு பயர்ந்தால் அது அதிகமாகுமே தவிர குறையாது.

நல்லவிதமான உணர்வுகள் எதுவெது தெரியுமா சிரிப்பு – இது நுரையீரலுக்கும் இருதயத்துக்கும் நல்ல பயிற்சி. சிரித்தபின் பார்த்தால் இரத்த அழுத்தம் குறைந்திருக்கும். மூச்சுவிடுவது சுலபமாக இருக்கும். நன்றாக நித்திரை வரும். அன்பு–பல வியாதிகளைக் குணப்படுத்தும். நல்ல விதமான எதிர்பார்ப்பு வாழ்க்கையிலே ரொம்ப முக்கியம். வாழ்க்கையிலே ஒரு குறிக்கோள் இல்லாவிட்டால் அது பயன்படாது. நம்பிக்கை மிக மிக அவசியம். நான் எங்கே உருப்படப் போகிறேன் என்று நினைப்பவர்கள் உருப்படப் போவதேயில்லை. தன்னம்பிக்கையும் (Sela con aidience)ஓர் ஆக்கபூர்வமான உணர்வு. தன்னம்பிக்கையை வளர்த்துக் கொண்டால் உங்கள் உடல் நலம் அபிவிருத்தியடையும். வாழ்க்கையும் நன்றாக அமையும்! நல்ல விதமாகச் சிரிக்கிற நோயாளிகள் சீக்கிரம் குணமாகி விடுகிறார்கள் என்பது மருத்துவக் கண்டுபிடிப்பு. ஒரு பேச்சாளர் ஒரு கூட்டத்திலே தீராவேசமாகப் பேசிக் கொண்டிருந்தார். கடைசிக் கட்டத்திலே உணர்ச்சிவசப்பட்டு அழுதுவிட்டார். கூட்டம் முடிந்ததும் ஏன் சார் அழுதீர்கள்? என்று கேட்டேன்.

நான் பேசி முடிக்கிற போது என் எதிரில் உங்களைத் தவிர வேறு யாரும் இல்லை. எல்லோரும் எழுந்துபோய்விட்டார்கள். அதனாலேதான் உணர்ச்சி வசப்பட்டு அழுதுவிட்டேன் என்றார். இந்த Emotionனை எந்த ரகத்தில் சேர்ப்பது?

தென்கச்சி கோ சுவாமிநாதன்

# கருணாநிதி உலகத் தமிழர்களை ஏமாற்றுகிறார் –வைகோ குற்றச்சாட்டு

முதலமைச்சர் கருணாநிதி உலகத் தமிழர்களை ஏமாற்றிக் கொண்டிருப்பதாக ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ குற்றம்சாட்டியுள்ளார்.

விடுதலைப்புலிகளின் அரசியல் பிரிவு தலைவர் தமிழ்ச்செல்வன் மறைவுக்கு இரங்கல்தெரிவிக்க சென்னையில் போலிஸ் தடையை மீறி ஊர்வலம் செல்ல முயன்ற ம.தி.மு.க பொதுச்செயலாளர் வைகோ. தமிழர் தேசிய இயக்க தலைவர் நெடுமாறன் உட்பட 262 பேர் கைது செய்யப்பட்டு புழல் மத்திய சிறையில் அடைக்கப்பட்டிருந்தனர். அவர்கள் அனைவரையும் ஜாமினில் விடுதலை செய்யக்கோரி எழும்பூர் நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்யப்பட்டது. இந்த மனுவை விசாரித்த மஜிஸ்திரேட் முருகானந்தம், அனைவரையும் நிபந்தனை ஜாமினில் விடுதலை செய்ய உத்தரவிட்டார்.

இதையடுத்து நேற்றுக் காலை 9.30 மணியளவில் வைகோ, நெடுமாறன் உட்பட 262 பேரும் புழல் சிறையிலிருந்து விடுதலையானார்கள். சிறைவாயிலில் வைகோ நிருபர்களிடம் கூறியதாவது,

தமிழ் உணர்வுடன் மரணக்குழிக்கு சென்றுள்ள தமிழர்களுக்காக அனைத்து நாடுகளுடனும் பேச்சு நடத்தி வெற்றி கண்ட மாவீரன் தமிழ்ச்செல்வன் குண்டு வீச்சில் வீரமரணமடைந்தார்.

இதற்காகதமிழ் உணர்வுஉள்ள பல்லாயிரக்கணக்கான தோழர்கள் இரங்கல் தெரிவிக்கும் வகையில் அமைதிப் பேரணி நடத்தினோம். உலகத்தமிழர்களின் ஒட்டுமொத்த உள்ளுணர்வை புரிந்து கொள்ளாத முதலமைச்சர் கருணாநிதி அடக்கு முறைமூலமண்ணைப் போன்ற தலைவர்களை கைது செய்து சிறையில் அடைத்தார்.

அதேசமயம் தமிழ்ச்செல்வனுக்காக அவர் கவிதாஞ்சலியும் செலுத்தினார். இது உலகத் தமிழர்கள் அனைவரையும் ஏமாற்றும் செயலாகும். அரசு விடுவிக்கும் என்று எதிர்பார்க்காமல் நீதிமன்றம் மூலம் விடுதலை யாகியிருக்கிறோம். இவ்வாறு அவர் கூறினார். பின்னர் அவர்கள் அனைவரும் புழல் சிறையிலிருந்து புறப்பட்டு சென்றனர்.(அ-5)

## விண்ணப்பம் கோரலும் பரீட்சைக்கான திகதிகளும்

யாழ்.பல்கலைக்கழகம் புதிய கல்வியாண்டிற்கு முதுகலைமாணி, கல்வியியல் முதுமாணிப் பட்டப்பின் டிப்ளோமா கற்கை நெறிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகிறது. விண்ணப்பப் படிவங்களை பல்கலைக்கழக உயர் கல்விப்பீட பரீட்சை அனுமதிக்கிளையில் பெற்றுக்கொள்ளமுடியும்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் வவுனியா வளாகத்தில் நடாத்தப்படும் பட்டப்பின் படிப்பு, கல்வி டிப்ளோமா முதலாம் வருடப்பரீட்சைகள் 28ஆம் திகதி ஆரம்பிக்கப்படும். இதேவேளை யாழ்.பல்கலைக் கழக பட்டப்பின் கல்வி டிப்ளோமா இரண்டாம் வருடப் பரீட்சைகள் டிசெம்பர் 1ஆம் திகதியும், முதுகலை மாணி மற்றும் நூலக தகவல் விஞ்ஞானத்திற்கான பரீட்சைகள் டிசெம்பர் 3ஆம் திகதி ஆரம்பமாகும் என பீடாதிபதி கே.கந்தசாமி அறிவித்துள்ளார். (6)

## இராசிபலன்

19.11.2007

(கார்த்திகை 03, திங்கட்கிழமை)

நவமி முற்பகல் 09.32 மணிவரை

சதயம் முற்பகல் 09.14 மணிவரை

இராகுகாலம் 07.39-09.09 மணிவரை

சுபநேரம் 12.09-01.39 மணிவரை

| | |
|---|---|
| மேடம் | இஷ்டசித்தி, தொழில் லாபம், குடும்ப மகிழ்ச்சி, பெருமையடைதல். |
| இடபம் | தொழில்நன்மை, நல்ல செய்தி, மேன்மை, முயற்சி கைகூடும். |
| மிதுனம் | உடல்உழைப்பு, புதிய திட்டமிடல், பெரியோர் உதவி, இடமாற்றம். |
| கடகம் | எதிர்பாராத அச்சம், காரியதடங்கல், போசன சுகம், உடல்நலக்குறைவு. |
| சிங்கம் | கௌரவமான நிலை, பணவருவாய், எடுத்தகாரியம் கைகூடும், போசனசுகம். |
| கன்னி | திடீர்பயணம், முயற்சி கைகூடும், தேகநலன், நல்ல மரியாதை. |
| துலாம் | வியாபார நன்மை, முயற்சி தாமதம், புத்திரால் கவலை, பணவிரயம். |
| விருச்சிகம் | பயந்த சுபாவம், புதியவிடயம், விரும்பாத உறவு, சுபநிகழ்வு. |
| தனுசு | இனியஅனுபவம்,புதியபொருள்சேர்க்கை, நல்ல முயற்சி, வாக்கு மேன்மை. |
| மகரம் | மாதர்நட்பு, காரியதாமதம், கடின வார்த்தை, பணவிரயம். |
| கும்பம் | பெரியோர் சந்திப்பு, ஆழ்ந்த சிந்தை, சயனசுகம், போசனநன்மை. |
| மீனம் | உறவினர் சந்திப்பு, மனக்குழப்பம், பிரயாணம், காரியதாமதம் |

வளவன்

# கலை இலக்கிய இருதிங்கள் ஏடு 'ஜீவ நதி' இரண்டாவது இதழ்

ஜீவநதி கலை இலக்கிய இருதிங்கள் ஏட்டின் இரண்டாவது (புரட்டாதி–ஐப்பசி) இதழ் வெளிவந்துள்ளது. ஒருபுதியசஞ்சிகையின் இரண்டாவது இதழ் வெளிவருவதும் "முதலாவது இதழின் முழுப் பிரதிகளுமே முடிந்துவிட்டன" என்ற ஆசிரியரின் கூற்றி னூடாக வெளிவரும் ஈழத்தமிழரின் வாசிப்பு ஆர்வம் அதிகரித்துள்ள தான செய்தியும் இலக்கிய ஆர்வலர்களுக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்துவனவாகும்.

சின்னராஜா விமலன், கலாமணி பரணீதரன் ஆகிய இருவரையும் பிரதம ஆசிரியர்களாகக் கொண்டு வெளிவரும் இச் சஞ்சிகையில் பத்துக் கவிதைகளும் ஒன்பது கட்டுரைகளும் மூன்று சிறுகதைகளும் செங்கை ஆழியானின் நேர்காணலும் நூல் மதிப்புரை, கலை இலக்கிய நிகழ்வுகள் தொடர்பான செய்திகளும் இடம்பெறுகின்றன.

இவ் விதழில் இடம்பெற்றுள்ள மகாகவியால் ஆரம்பிக்கப்பட்ட குறும்பா மரபு முரளிதரனாலும் நன்கு கையாளப் பட்டுள்ளது என்பதை "சிவ பெருமான் வீதியுலா வந்தார்.

செம்பொன்னிற் புதுப் பொலிவு தந்தார்

அவரடியார் திரைமெட்டை

நாதசுரம் கொண்டிசைக்கப்

புவனத்தைப் படைத்ததற்கு நொந்தார்" எனும் குறும்பாவு மூலம் அறியக்கூடியதாக இருக்கிறது. பல்துறை சார்ந்தவர்களுக்கும் பயன்பட பல கட்டுரைகளும் மூன்று சிறுகதைகள் இச்சஞ்சிகையில் இடம்பெற்றுள்ளன.

இன்றைய சூழலிலும் துணிந்து ஒரு சஞ்சிகையை வெளியிடமுன்வந்த இந்த இளைஞர்களின் முயற்சியால் வெளிவந்துள்ள 'ஜீவநதி' தொடர்ந்து பாய் வதற்கு வாசக நேயர்களது உதவி அவசியம்.

ம.பா.மகாலிங்கசிவம்

# விஜயதாச ராஜபக்ஷவின் வீட்டிற்கு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது

இலங்கை நாடாளுமன்ற உறுப்பினர் விஜயதாச ராஜபக்ஷவின் கொழும்பில் உள்ள வீட்டில் சனிக்கிழமை இரவு முதல் இருபதுக்கும் அதிகமான அதிரடிப்படையினர் குவிக்கப்பட்டதால் பரபரப்பு ஏற்பட்டது.

மஹிந்த ராஜபக்ஷ தரப்பிலிருந்து எதிரணிக்குத் தாவிய விஜயதாச ராஜபக்ஷவை மீண்டும் ஆளும் தரப்பிற்குள் இழுத்துக் கொள்ள அமைச்சர்கள் இருவர் பகீரத முயற்சிகளை செய்து வரும் நிலையில் அவரது வீட்டில் ஏராளமான அதிரடிப்படையினர் குவிக்கப்பட்டனர்.

அமைச்சர் ஜெயராஜ் பெர்னான்டொபுள்ளேயும் பிரதி நிதியமைச்சர் டிலான் பெரேராவும் விஜயதாச ராஜபக்ஷவின் வீட்டிலேயே சனிக்கிழமை பிற்பகல் முதல் இரவுவரை இருந்துள்ளனர் என்று அவர்கள் விஜயதாச ராஜபக்சவை மீண்டும் ஆளுந் தரப்பிற்குள் இழுக்கும் பேச்சு வார்த்தைகளை நடத்தினர் என்றும் செய்திகள் தெரிவிக்கின்றன. (அ–6)

# கூடைப்பந்தாட்ட சுற்றுப்போட்டி -2007

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட கூடைப் பந் தாட்ட சங்கத்தினரால் நடாத்தப்படும் ஆண், பெண் இருபாலருக்குமான ஒருநாள் சுற்றுப்போட்டி டிசம்பர் 2ஆம் திகதி நடாத்தத் திட்டமிட்டுள்ளபடியால் கூடைப்பந்தாட்ட சங்கத்தில் பதிவு செய்யப்பட்ட கழகங்கள் 24 ஆம் திகதிக்கு முன்னதாக விண்ணப்பங்களை செயலாளரிடம் சமர்ப்பிக்கும்படி யாழ்.மாவட்ட கூடைப்பந்தாட்ட சங்கச் செயலாளர் அறிவித்துள்ளார்.

இச் சுற்றுப்போட்டிக்கான ஒழுங்குகள் 25 ஆம் திகதி யா/ மத்திய கல்லூரியில் உள்ள கூடைப்பந்தாட்ட திடலில் இடம் பெறும் என்றும் தெரிவித்துள்ளார். (6)




வடக்கு–கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் ஆரம்பப் பிரிவினதும் ஜி.ரி.சற் நிறுவனத்தினதும் அனுசரணையுடன் வடமராட்சி கல்வி வலயத்தில் பருத்தித்துறைக் கல்விக்கோட்டத்திற்கான பரிகாரக் கற்பித்தல் செயலமர்வில் பங்குபற்றிய வளவாளர்களைக் படத்தில் காணலாம்.

# 'பட்ஜெட்' அரசியல் சூறாவளியும்

தென்னிலங்கையில் அரசியல் தளம்பல் நிலைதோன்றியுள்ளது. ஜனாதிபதியாக மஹிந்த ராஜபக்ஷ பதவியேற்ற பின்னர் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் மூன்றாவது வரவு - செலவுத் திட்டம் மீதான வாக்கெடுப்பு தொடர்பாகவே இந்த நிலை தோன்றியுள்ளது. நாடு கடும் பொருளாதார நெருக்கடிகளுக்குள் சிக்கியுள்ள வேளைசமர்ப்பிக்கப்படும் இந்த வரவு - செலவுத்திட்டம் பாதகமான பலவிளைவுகளை உண்டுபண்ணலாம் என்பது பலவேறு தரப்பினருக்கும் அரசுக்கும் தெரிந்த ஒன்றே.

எனவேதான் வழமைபோல இராணுவ வெற்றிச் செய்தி ஒன்றின் மீது அரசு நம்பிக்கையை கொண்டிருந்தது.

வரவு - செலவுத்திட்டம் சமர்ப்பக்கப்படும் போது வடபோர்முனையில் இருந்து கிடைக்கும் இராணுவ வெற்றிச்செய்தி ஒன்று வரவு - செலவுத்திட்டத்தில் உள்ள ஓட்டைகளை அடைத்து விடும் என அரசு நம்பியது. ஆனால் அது எதிர்விளைவாகி போனதே தற்போது அரசுக்கு தர்மசங்கட நிலையை ஏற்படுத்தியுள்ளது.



அமெரிக்கா வழங்கிய Rigid Hull Inflatable Boat

சுமார் 4,000 இராணுவத்தினரைக் கொண்ட ஏழு பற்றாலியன் துருப்புக்களின் உதவியுடன் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை மூலம் படையினரால் தமது முன்னணி நிலைகளில் கூட மாற்றத்தை ஏற்படுத்த முடியவில்லை என்பதுடன் அதிக சேதங்களையும் அவர்கள் சந்தித்துள்ளனர் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

இராணுவ வெற்றிச்செய்தி காலை வாரிவிட்ட நிலையில் அரசை காப்பாற்றிக் கொள்ள ஆளுந்தரப்பும், அதனை கவிழ்க்க எதிர்த்தரப்பும் கடும் பிரயத்தனங்களை மேற்கொண்டு வருகின்றன.

நாடாளுமன்றத்தில் 22 ஆசனங்களை கொண்டுள்ள தமிழ்த்தேசிய கூட்டமைப்பு போருக்கு அதிக நிதி ஒதுக்கப்பட்ட வரவு - செலவுத்திட்டத்தை எதிர்த்து வாக்களிக்கும் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. எனவே இந்த சமயத்தில் 37 ஆசனங்களை உடைய ஜே.வி.பி.யின் ஆதரவையும் அரச கூட்டணியில் அல்லது அரசதரப்பல் இருந்து சில நாடாளுமன்ற உறுப்பனர்களின் ஆதரவுகளை பெறுவதன் மூலம் வரவு - செலவு திட்டத்தை தோற்கடிக்க முடியும் என ஐ.தே.க நம்புகின்றது. வரவு - செலவுத்திட்டம் தோற்கடிக்கப்பட்டால் அது அரசை தோற்கடித்ததற்கு சமனாகிவிடும். எனவே அதற்கான முயற்சியில் ஐ.தே.க. முழுமூச்சாக இறங்கியுள்ளது.



கடற்படையினருக்கான படகுகளை கையளிப்பதற்காக திருமலைக் கடற்படைத் தளத்திற்கு சென்ற அமெரிக்கத் தூதுவருக்கு வரவேற்பளிக்கப்படுவதை காணலாம்.

ஆனால் இங்கு ஒன்று மட்டும் நோக்கத்தக்கது. அதாவது வரவு - செலவுத்திட்டத்தை எதிர்த்து வாக்களிப்பதன் மூலம் அரசைக்கவிழ்ப்பது சில சமயங்களில் சாத்தியமானாலும் கூட எதிர்க்கட்சி, ஆட்சி அமைப்பது என்பது சாத்தியமற்றது. ஏனெனில் எந்த அரசிற்கும் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு ஆதரவு அளிக்கப்போவதில்லை. மேலும் தென்னிலங்கை அரசியல் கட்சிகள் எல்லாம் சிதறலடைந்தே உள்ளன.

எனினும் இந்த சந்தர்ப்பத்தை எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தனக்குகிடைத்த இறுதி சந்தர்ப்பமாகவே கருதுகின்றார். ஏனெனில் பல தடவைகள் தோல்விகளை சந்தித்த ரணிலின் தலைமையின் மீது கட்சிக்குள் அதிருப்திகள் தோன்றி வருகின்றன. இந்த ஆண்டின் முற்பகுதியில் ஐ.தே.க. வின் பிரதித்தலைவர் கருஜயசூரிய உட்பட 17 உறுப்பினர்கள் அரசுப்பக்கம் தாவியிருந்தனர். அதற்கு முன்னரும் ஒரு சிலர் கட்சி தாவியிருந்ததுடன் மேலும் தாவல்கள் இடம்பெறலாம் என எதிர்பார்க்கப் படுகின்றது.

ரணிலின் தலைமை மீது ஏற்பட்டு வரும் நம்பக்கையீனமே அதற்கான காரணம் என கருதப்படுகின்றது.

ஆனால் அரசதரப்பில் ஏற்பட்டு வரும் பதவிப்போட்டிகள், நாட்டின் பொருளாதாரத்தில் ஏற்பட்டு வரும் பாரிய வீழ்ச்சி, அதன் தொடர்ச்சியாக மக்களின் வாழ்க்கைச்செலவில் ஏற்பட்டுவரும் அதிகரிப்புக்கள், ஆளும் தரப்பினரின் நிர்வாகத்தில் ஏற்பட்டு வரும் ஊழல் குற்றச் சாட்டுகள் என்பன அரச தரப்பினரின் செல்வாக்கை வெகுவாக

# மறைமுக இராணுவ உதவிகளும்

சரித்துள்ளது. இதில் முக்கிய பங்கு வகிப்பது போரே.

போரின் மூலம் ஏற்பட்டுவரும் பொருளாதார இழப்புக்கள், போரை எதிர்கொள்ள செலவிடப்படும் வளங்கள், நவீனத்துவம் பெற்று வரும் போரியல் உத்திகளை எதிர்கொள்ள அரசுக்கு தேவைப்படும் நிதி ஒதுக்கீடுகள் என்பன சாதாரண மக்களின் வாழ்க்கையில் பாரிய சுமையாக வீழ்ந்துள்ளது. இந்த நேரடியான காரணிகளை தவிர போரினால் ஏற்பட்டு வரும் நேரடியற்ற காரணிகளின் தாக்கமும் பொருளாதாரத்தில் அதிக தாக்கங்களை ஏற்படுத்தி வருகின்றது.

உதாரணமாக வீழ்ச்சியடையும் உல்லாசப்பயணத்துறையினால் ஏற்பட்டு வரும் வேலைவாய்ப்பு இழப்புக்கள், இலங்கையில் முதலீடுகளை மேற்கொள்ள பின்னடிக்கும் முதலீட்டாளர்கள் என இதன் தாக்கம் மிகவும் நீளமானது.

ஆனால் தற்போது வரவு - செலவுத்திட்டத்தை தோற்கடிக்க எதிர்க்கட்சி முயன்று வருவதும், சிறிய கட்சிகள் அரசை மிரட்டி வருவதும் நாட்டின் நன்மைக்காகவோ அல்லது போரை முடிவுக்கு கொண்டு வரும் நோக்கத்துடனோ அல்ல என்பது தெளிவானது. தமது சுய இலாபங்களை கருதியே பலர் இந்த களத்தில் இறங்கியுள்ளனர். ஜே.வி.பி.யை பொறுத்தவரையில் அது ஒரு பேரினவாத கட்சி. இந்த கருத்தையே அது தற்போதும் நிரூபித்துள்ளது. அரசு மேற்கொண்டு வரும் அத்தியாவசிய பொருட்களின் விலையேற்றத்தை எதிர்த்தோ அல்லது அரச நிர்வாகத்தில் நடைபெற்று வரும் முறைகேடுகளை எதிர்த்தோ நடவடிக்கையில் இறங்காத ஜே.வி.பி. வரவு - செலவுத்திட்டம் என்னும் துரும்பு சீட்டை காட்டி தனது அரசியல் அபிலாஷைகளை பெற்றுவிட முயன்று வருகின்றது.

ஆனால் அதற்கான காரணிகளாக ஜே.வி.பி முன்வைத்துள்ள நிபந்தனைகள் வேடிக்கை ஒன்றும் வரவு - செலவுத் திட்டத்தில் உள்ள குறைபாடுகள் அல்ல. முழுக்க முழுக்க தமிழ் மக்களின் மீதான இனப் போரை மையப்படுத்தியவை.

அதாவது போர்நிறுத்த உடன்பாட்டை இரத்து செய்தல் வேண்டும், அனைத்துக் கட்சி குழுவை கலைக்க வேண்டும், அனைத்துலக அமைப்புக்களின் மற்றும் பிரதிநிதிகளின் அழுத்தங்களையும் மற்றும் பயணங்களையும் தடுக்க வேண்டும், இலங்கையின் ஒருமைப்பாட்டை பாதுகாக்க வேண்டும். என்பவை தான் வரவு - செலவுத் திட்டத்தை எதிர்ப்பதற்கு ஜே.வி.பி. முன்வைத்துள்ள நிபந்தனைகள்.

இவற்றில் பெரும்பாலானவை தற்போது நடைமுறையில் இல்லை என்பது வேறு விடயம். மேலும் இந்த நிபந்தனைகளுக்கும் வரவு - செலவுத்திட்டத்தின் மூலம் அப்பாவி மக்களின் மீது சுமத்தப்படும் சுமைகளுக்கும் எந்த தொடர்புகளும் இல்லை. ஆனால் ஜே.வி.பிக்கு ஜனாதிபதி மஹிந்த வைத்தபொறி ஆபத்தானது. அதாவது நாடாளுமன்றம் கலைக்கப்படும் என அவர் கூறிய மிரட்டலால் ஜே.வி.பி ஆட்டம் கண்டிருக்கும் என்பதில் ஐயமில்லை. அதாவது மீண்டும் ஒரு பொதுத்தேர்தல் நடைபெறுமாக இருந்தால் ஜே.வி.பி தற்போதுள்ள ஆசனங்களை மீண்டும் பெறுமா என்பது பெரும் சந்தேகம்.

அதற்கு ஜனாதிபதி மஹிந்த பதவியேற்ற பின்னர் நடைபெற்ற உள்ளூராட்சி தேர்தல்கள் சான்று பகரும்.

ஜாதிகஹெல உறுமயவுக்கும் இதேநிலைமைதான். போரை மட்டும் தூக்கி பிடிப்பதை விட மீண்டும் பொதுத்தேர்தலில் போட்டியிடும் அளவிற்கு இந்த கட்சிக்கும் அரசியல் பலம் கிடையாது. எனினும் ஆளும் கூட்டணியில் இருந்து அதன் நாடாளுமன்ற உறுப்பனர் விஜய தாசராஜபக்ஷ எதிர்த்தரப்புக்கு சென்றதுடன், சுதந்திரக் கட்சியின் மத்திய குழுவில் அங்கம் வகித்த பிரதி அமைச்சர் டிலான் பெரேராவும் அந்த குழுவில் இருந்து விலகியுள்ளார். இந்த நிலையில் ஐ.தே.கவின் இரத்தினபுரி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மஹிந்த ரட்ணதிலக அரசின் பக்கம் தாவியுள்ளார்.

இதனிடையே அரசதரப்பல் உள்ள அர்ஜுன ரணதுங்க எதிர்த்தரப்புக்கும், எதிர்த்தரப்பல் இருந்து சிலர் ஆளும் தரப்பிற்கும் செல்லலாம் எனவும் ஊகங்கள் கிழம்பியுள்ளன. இந்த மாற்றங்கள் சில சலசலப்புக்களை தென்னிலங்கையில் ஏற்படுத்தி வருகின்றன.

ஆனால் ஜே.வி.பி.யை பொறுத்தவரையில் தமது நிபந்தனைகள் கோரிக்கை அல்ல என தெரிவித்துள்ளதுடன், நடைமுறையில் அற்ற அல்லது செயற்திறன் அற்ற ஜே.வி.பி.யின் நிபந்தனைகளை சாதகமாக பரிசீலிப்பதாக அரசும் தெரிவித்துள்ளது. ஜே.வி.பி. அரசை விட்டு விலகப்போவதில்லை எனவும், அரசும் அதனை அனுமதிக்கபோவதில்லை எனவும் மறைமுக காட்டிவருகின்றன. எனவே ஜே.வி.பி. அரசை தோற்கடிக்கும் என்பதையோ அல்லது புதிதாக உருவாகும் அரசு தமிழ் மக்களுக்கு அனுகூலமாக அமையும் என்பதையோ தமிழ் மக்கள் கருத்தில் எடுக்கப்போவதில்லை.

ஆனால் இந்த உள்ளூர் அரசியல் நெருக்கடிகளுக்கு மத்தியில் உலக அரசியல் மாற்றம் ஒன்று மெல்ல மெல்ல அம்பலமாகி வருவது தற்போது கவனிக்க தக்கது. அதாவது இலங்கையின் இனப்போருக்கு மறைமுகமாக ஊக்கமளித்து வந்த அமெரிக்க அரசின் நடவடிக்கைகள் தற்போது வெளிப்படையாகி வருவதுடன், அது தமிழ் மக்கள் மத்தியில் கடும் விசனத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

அமைதிப் பேச்சுக்களின் மூலம் இனப்பிரச்சினைக்கான தீர்வைக் காணவேண்டும் என வெளிப்படையாக கூறிக்கொண்டு மறைமுகமாக இலங்கை இராணுவத்திற்கு பயிற்சியளித்த அமெரிக்கா தற்போது வெளிப்படையாக அதன் தலையீடுகளை ஆரம்பத்துவிட்டதாகவே கருதமுடியும். இராணுவச் சமநிலையில் எட்டப்பட்ட பேச்சுக்களை ஒரு தரப்பினரை பலப்படுத்துவதன் முலம் சீரழிப்பதில் அமெரிக்காவின் பங்கு அதிகமானதாகவே கருதப்பட்டது.

இதுதவிர போர்நிறுத்த காலத்தில் சாகரா எனப்படும் கண்காணிப்பு கப்பலையும் இலங்கை கடற்படைக்கு அது வழங்கியிருந்தது. இலங்கை அரசிற்கான இராணுவ உதவிகள் போர் நிறுத்தத்தை பாதிக்கும் என விடுதலைப்புலிகள் பல தடவைகள் சுட்டிக்காட்டியிருந்தனர்.

மனித உரிமை மீறல்கள் இலங்கையில் மோசமடைந்து வருவதாகவும், அங்கு போரினால் அல்லல்படும் தமிழ் மக்களுக்கு உதவும் பொருட்டு தொண்டு நிறுவனங்கள் பணியாற்ற முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளதாகவும் சர்வதேச மன்னிப்பு சபை, மனித உரிமைகண்காணிப்பகம், அரசார்பற்ற நிறுவனங்கள், மனித உரிமைகள் அமைப்புக்கள் என்பன தொடர்ந்து தெரிவித்து வரும் நிலையில் அமெரிக்கா தற்போது இலங்கைக்கான தனது ஆயுத உதவிகளை வெளிப்படையாக வழங்கியுள்ளது.

மேலும் தமிழ் மக்களின் மீதான அழுத்தங்களையும் அது வெளிப்படையாகவே அதிகரித்து வருகின்றது. விடுதலைப்புலிகள் மீதான தடை என்னும் போர்வையில் தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளை புறம் தள்ளிய அமெரிக்கா தற்போது தமிழ் மக்களின் இன்னல்களுக்கு உதவிகளை புரிந்து வந்த தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் நிதியையும் முடக்கும் நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது.

அமெரிக்காவின் இந்த நடவடிக்கை சர்வதேச சமுகத்தின் மீது தமிழ் மக்களுக்கு இருந்த அற்ப நம்பிக்கையையும் குழிதோண்டி புதைப்பதாகவே உள்ளது.

இந்தமாத இறுதிப்பகுதியில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஈரான் பயணத்தை தடுப்பதற்காக அமெரிக்கா, இராஜதந்திர வழிகளில் முயன்று வந்ததாகவும், அதன் தொடர்ச்சியாக அரசை குளிர்விற்கும் நோக்குடன் ஆயுதங்களை வழங்கிவருவதாகவும், தமிழ் மக்களின் மீது கடுமையான அழுத்தங்களை சுமத்தி வருவதாகவும் ஒருசாரார் கருத்து தெரிவித்துள்ளனர்.

இலங்கை அரசு பாகிஸ்தான், சீனா ஆகிய நாடுகளிடம் இருந்து ஆயுதங்களை வாங்க முயல்கின்றது என்ற காரணங்களை கூறிக்கொண்டு தான் இந்திய மத்திய அரசும் இலங்கைக்கான தமது ஆயுத உதவிகளை மேற்கொண்டு வருகின்றது. அதாவது அமெரிக்காவும், இந்தியாவும் சில சாக்குபோக்கான காரணங்களை கூறிக்கொண்டு தமிழ் மக்களுக்கு எதிரான தமது நடவடிக்கைகளை முதன்மைப் படுத்தி வருகின்றது என்பது வெளிப்படையானது. 2005 ஆம் ஆண்டின் இறுதிப்பகுதியில் அரசபடையினருக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் மோதல்கள் உக்கிரம் அடைந்த போது விடுதலைப்புலிகள் மிகவும் வலிமை மிக்க இலங்கை இராணுவத்



அமெரிக்கா வழங்கிய Rigid Hull Inflatable Boat

தினரை எதிர்கொள்ள வேண்டியிருக்கும் என்று அமெரிக்கா அன்று தெரிவித்திருந்தது. அந்த கருத்தின் உட்பொருள் தற்போது மெல்ல மெல்ல வெளிவரத் தொடங்கியுள்ளது.

அதாவது தமிழ் மக்களுக்கு எதிரான போரில் இலங்கை அரசுடன் வெளிப்படையாக கைகோர்க்க அமெரிக்கா தயாராகி விட்டதா என்பதுதான் தற்போது எழுந்துள்ள முக்கியமான கேள்வி. அதாவது இந்து மாகடலின் நுழைவுப்பாதைக்கு மியன்மாரில் காலூன்ற முடியாது போன அமெரிக்கா இலங்கையில் தனது காலை பதிக்க தயாராகி வருகின்றது என்பதுதான் இதன் பொருளாகலாம்.

ஆனால் நீண்டகால நோக்கில் இந்திய நலனுக்கு மிகவும் ஆபத்தாக மாறப்போகும் இந்த மாற்றத்தை தடுத்து நிறுத்தும் வல்லமை இந்தியாவுக்கு உண்டா என்பதும் பெரும் சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது.

மேற்குலகத்தை சார்ந்து வளர்ந்து வரும் இந்திய பொருளாதாரமும் அதனை தடுக்க முடியாத காரணிகளில் ஒன்று. இதுவே சீனாவின் பொருளாதார வளர்ச்சிக்கும் இந்தியாவின் பொருளாதார வளர்ச்சிக்கும் இடையிலான வேறுபாடுகள்.

மனித உரிமைகள் மீறப்படுவதாகவும், ஜனநாயகம் சீரழிந்து போயுள்ளதாகவும் மியன்மாரில் முதலைக்கண்ணீர் வடித்த அமெரிக்கா இன்றைய உலக ஒழுங்கில் மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுகள் தெரிவிக்கப்படும் இலங்கை அரசுடன் கைகோர்ப்பது, அமெரிக்காவின் கபட நாடகங்களை இலகுவாக இனங்காண உதவியுள்ளதுடன், அதன் பூகோள அரசியல் தமிழ் மக்களின் உரிமைப் போரிலும் தாக்கத்தை ஏற்படுத்தலாம் என்பதை முன்னரே உணரும் வாய்ப்புக்களையும் ஏற்படுத்தி உள்ளது.

**வேல்ஸிலிருந்து அருஷ்**

ஒருபக்கம் உறுதியற்ற அரசியல் நிர்வாகம், மறுபுறம் இராணுவத்தீர்வுக்கு ஊக்கமளிக்கும் மேற்குலகம் இவை எல்லாவற்றிற்கும் இடையில் அடிக்கடி பல திருப்பங்களை சந்தித்து வரும் களநிலைமைகள் என்பன இலங்கை அமைதி முயற்சிகளுக்கான சாத்தியங்களை முற்றாகவே இல்லாது செய்துள்ளன.

# இலங்கைக் கடற்படையா? இந்திய மீனவர்களா? தினமணி ஆசிரியர் தலையங்கம் எழுப்பும் கேள்வி

கச்சதீவை இலங்கைக்குத் தாரைவார்த்தது தான் தமிழக மீனவர்களின் பெரிய இழப்பு என்று தெரிவித்திருக்கும் தமிழகத்திலிருந்து வெளியாகும் தினமணி நாளிதழின் ஆசிரியர் தலையங்கம், தமிழக மீனவர்கள் எதிர்கொள்ளும் சிக்கல்களுக்கு யார் காரணம் என்பது குறித்தும் கேள்வி எழுப்பியிருககிறது. "மீனவர் வாழ்வு விடியுமா?" என்று தலைப்பிட்டு எழுதப்பட்டிருககும் அந்த ஆசிரியர் தலையஙகத்தில் மேலும் கூறப்பட்டுளளதாவது:-

அண்மைக்காலமாக, தமிழக மீனவர்கள் தொழில்செய்து பிழைக்க முடியாத அவலநிலை ஏற்பட்டுள்ளது. அவர்கள் இலஙகைக் கடற்படையால் தாக்கப்படுவதும் சிறைபிடிக்கப்படுவதும் அடிக்கடி நடக்கின்றன.

நாகை துறைமுகத்திலிருந்து நூற்றுக்கணக்கான விசைபபடகுகளில் மீனவர்கள் மீன்பிடிக்கச் சென்றனர். அவர்கள் கோடியககரைக்கு தென்கிழக்கே மீன் பிடித்துக் கொண்டிருந்த போது, 4 படகுகளில் வந்த இலங்கைக் கடற்படையினர் தமிழக மீனவர்களின் 17 படகுகளைக் கடத்திச் சென்றனர். அந்தப் படகுகளில் 99 மீனவர்கள் இருந்தனர். மீனவர் கிராமப் பஞ்சாயத்தார் இதுபற்றி நாகை மாவட்ட ஆட்சி யரிடமும், மீன் வளத்துறை அதி காரிகளிடமும் முறையிட்டனர். தகவலறிந்த முதல்வர், உடன டியாக மத்திய வெளியுறவுத்துறை இணைய மைசசர் அகமதுவிடம் தொலைபேசியில் தொடர்பு கொண்டார். அவர் தந்த உறுதியின் பேரில 99 மீனவர்களும் விடுவிக்கப்படுவதாக இலங்கை அரசு அறிவித்தது.

'இந்தியா இலங்கை இடையிலான நீண்டகால நட்புறவினைக் கவனத்திற்கொண்டு இம் மீனவர்களையும, அவர்களது படகுகளையும் விடுவிப்பதற்கான உத்தரவு பிறப்பிக்கப்படடுள்ளது ' என்று சென்னையில் உள்ள இலங்கை துணைத் தூதரகம் தெரிவித்தது.

இந்திய அரசாங்கம் இந்த மீனவரகள் தனது நாட்டுக்குடி மக்கள் என்பதை மறந்துவிட்டதா? 'யாருக்கோ நடக்கிறது, எப்படியோ போகட்டும் ' என்று பாராமுகமாக இருப்பதன் பொருள என்ன? தன் நாட்டு மக்களுக்கு இழைக்கப்படும் அவமானம் அரசுக்கு இல்லையா? நமது குடிமக்கள் வேற்று நாட்டுப் படையினரால் கைது செய்யப்படுவது நம்நாட்டு இறையாண்மைக்கு விடுக்கப்படும் சவால் இல்லையா? இந்தியாவின் மிக நீண்ட கடற்கரைகளில் ஒன்றான தமிழகக் கடறகரையின் நீளம் 1076 கிலோ மீற்றர். இவற்றில் 600 இற்கும் மேற பட்ட மீனவக கிராமங்கள். இந்தக் கிரா மங்களில் வாழும் மக்களின் எண்ணிக்கை சுமார் 8 லட்சம்.

ராமேஸ்வரம் முதல் நாகை வரை நீண்டிருக்கும் கடலில் மீனவர்கள் சுதந்திரமாக கட்டுமரம், படகு, தோணிகள், விசைப் படகுகளைச் செலுத்தித் தொழில் செய்துவந்த காலம் கடந்தகாலமாகிவிட்டது. இப்போது எந்த 'நேரத்தில் என்ன நடக்குமோ என்று அஞ்சிவாழும் நிலை.

சாதாரணமாகவே கடற்பயணம் ஆபத்தானது. எந்த நேரததில் அலை எப்பக்கம் அடிக்குமோ என்ற கவலை. சூறாவளியும, புயலும் அலைக்கழிக்குமே என்ற அச்சம். பாம்புத் தொல்லை இவற்றையெல்லாம் தாங்கிக் கொண்டு வலைவீசி பிடிக்கப்பட்ட மீன்களைப் பிடுங்கிக் கொள்வதும் தாக்குவதும், சுடுவதும், சிறைபிடிப்பதும் தொடரும பேரவலம். இதற்கு முடிவே கிடையாதா?

கரையில் நடப்பவை, உடனே சுடச்சுட செய்திகளாகி வெளிவருகின்றன் கடலில் நடப்பவை, பல நேரங்களில் வெளியே தெரிவதில்லை. கணக்கில் வராமல் கடலிலேயே மாய்ந்து போனவர்கள் எத்தனையோ பேர்?

பலமுறை இலங்கைக் கடறபடை இந்தியக் கடல் எல்லைக்குள் ஊடுருவி மீனவர்கள் மீது தாக்குதல் நடத்தியுளளது. கடந்த முறை இந்திய எல்லைககுள் வந்த இலங்கைக் கடற்படை, தென் தமிழக மீனவர்கள் ஐந்து பேர்மீது துப்பாக்கியால் சுட்டது. வழக்கம் போல சட்டப் பேரவையில் இதைக் கண்டித்துத் தீர்மானம், இறந்தோர் குடும பங்களுக்கு தலா ரூ. 2 லட்சம் அறிவிப்பு. அரசின் கடமை இத்துடன் முடிந்துவிட்டது. இம்மாதிரி நேரங்களில் அரசியல் கட்சிகளின் கண்டன அறிக்கைகள், அனுதாபச் செய்திகளால் மட்டும் பயன் என்ன? அந்த மீனவர்களை நம்பியுள்ள அவரகளது குடும்பத்தின் எதிர்காலம் பற்றி எண்ணிப் பார்க்க வேண்டும்.

இந்தியக் கடலோரக் காவல் பணிகளில் ஈடுபட்டிருக்கும் இந்தியக் கடற்படை என்ன செய்கிறது? இந்திய மீனவர்களின் பாதுகாப்புப் பணியை விட்டு விட்டு இலங்கை அரசுக்கே சேவை செய்வதுபோல் தோன்றுகிறது. போராளிகளும், அகதிகளும் வந்துவிடாமல் பார்த்துக் கொள்ளுவது மட்டும தான இதன் பணியா? ஆயுதக் கடத்தலைத் தடுக்கிறோம் என்று கூறுகின்றனர். தமிழக மீனவர்கள் கடத்தப்படு வதைத் தடுப்பது யார்?

தமிழகத்தின் பாரம்பரியக் குடிகள மீனவர்கள். இவர்களது பாரமபரியத் தொழில் மீன்பிடித்தல். இதனால் ஆண்டுக்கு ரூ. 5 ஆயிரம் கோடி அன்னியச் செலாவணி ஈட்டப்படுகிறது என்பதை அரசு கவனத்தில் கொள்ள வேண்டும்.

மீனவர்களுக்குக் கடற்கரைத [illegible] யம் புரிந்து கொள்ளப்படவில்லை. மீனவர்களைக் கடல் சார் பழங்குடியினர் பட்டியலில் சேர்க்க வேண்டும் என்ற மண்டல குழுவின் பரிந்துரையும் நடைமுறைப்படுத்தப்படவில்லை.

தமிழக மீனவர்களின் பெரிய இழப்பு, கச்சதீவை 'இலங்கைக்குத் தாரைவார்த்தது தான். 1974 இல் அப்போதைய பிரதமர் இந்திரா காந்தி தீர்க்கமாக ஆலோசிக்காமல் இலங்கையுடன ஒப்பந்தம் செய்து கொண்டு கச்சதீவைத் தாரைவார்த்துவிட்டார். கச்சத்தீவு 3.75 சதுரமைல் பரப்பளவு கொண்டது.' ராமேஸ்வரததிலிருந்து 12 மைல் தொலைவிலும், இலங்கை எல்லையிலிருந்து 18 மைல் தொலைவிலும் உள்ள சின்னஞ்சிறிய பகுதி.

இது மீனவர்களின் சொர்க்க பூமி. மீன்களின் உற்பத்திச் சுரங்கம். இங்கு பல்லாண்டுகளாக மீனபிடித் தொழிலில் ஈடுபட்டிருந்த மீனவரகளை அன்னிய மாக்கிவிடடது கச்சதீவு ஒப்பந்தம். தமிழக மீனவர்கள் எல்லை தாண்டுவதாக குற்றம்சாட்டப்படுவதும் இப்பகுதி தான். இப்பிரச்சினைக்கு நிரந்தரத தீர்வு காணும்நோக்கில் கச்சதீவை மீட்க முயற்சி எடுக்கப்படும் என்று ஆளுநர் உரைகளில் கூறப்பட்டது. ஆனால் தமிழக அரசு இதுவரை எந்த முயற்சியும் எடுக்கவில்லை. கச்சதீவைச் சுற்றியுள்ள பகுதிகளில் மீன் பிடிக்கவும், வலைகளை உலர்த்தவும், சுற்றுலாப் பயணிகள் சென்றுவரவும் அனுமதிக்கும் ஒப்பந்தத்தின் 5,6 ஆம் பிரிவுகளை இலங்கை அரசும், கப்பற்படையும் பொருள்படுத்துவதில்லை.

1977 இற்குப் பிறகு இத்தீவுக்குச் செல்லத் தடை விதித்து விட்டதால, இங்குள்ள புனித அந்தோனியார் கோயில் திருவிழாவே நடப்பதில்லை. இக்கோயிலை இலங்கை அரசு இப்போது மூடிவிட்டது. இலங்கை அரசு எந்த ஒப்பந்தத்தையும் மதித்ததில்லை. நடைமுறைப்படுத்தியதும் இல்லை. தமிழ்நாட்டில் இதுபற்றி திடீரென கோரிக்கை எழும். அடங்கிவிடும். மக்களும் மறந்துவிடுவார்கள். இறுதிவரை கோரிக்கைகள் நிறைவேறாமல் அப்படியே இருக்கும்.

இந்திய இலங்கை உடன்பாட்டின் விதிகள் தெளிவாக இருக்கின்றன.'இந்திய மீனவரும், இறை வழிபாட்டுப் பயணிகளும் இதுவரை கச்சத்தீவுக்கு வந்துபோய் அனுபவித்ததைப் போலத் தொடரந்து வந்துபோய் அனுபவிக்கும் உரிமையுடையவர்கள். இப் பயணிகள் இவ்வாறு வந்துபோக, இலங்கை அரசிடமிருந்து எவ்விதப் பயண ஆவணங்களையோ, நுழைவு அனுமதியையோ பெற வேண்டியதில்லை'

' இந்தியா மற்றும் இலங்கையைச் சேர்ந்தவர்களின் படகுகள் மற்றும் கப்பல்கள் விஷயத்தி லும் பரஸ்பர கடல் உரிமை தொடரும்' இவ்வாறு திட்டவட்டமான விதிகள் இருந்தும் இவற்றை அப்பட்டமாக மீறும் இலங்கை அரசிடம் கெஞ்சுவதும், அவர்கள் மிஞ்சுவதும் ஏன்? அத்துமீறி நடப்பது யார்? இலங்கைக் கடற்படையா, இந்திய மீனவர்களா? முடிவு செய்வது யார்?

# அரசாங்கத்திற்கு ஜே.வி.பி நிபந்தனை விதிக்கவில்லை

## பா.உ.விஜித ஹேரத்

நாட்டின் தற்போதைய அரசியல் யுத்த பொருளாதார கள நிலைகளை ஆராய்ந்தே அரசாங்கத்தின் வரவு செலவு திட்டத்தை ஆதரிப்பதா எதிர்ப்பதா என்ற தீர்மானத்தை ஜே.வி.பி.மேற்கொள்ளும் அரசாங்கத்திற்கு ஜே.வி.பி. நிபந்தனைகளை விதிக்கவில்லை. நாம் முன்வைத்த கோரிக்கைகளை நிறைவேற்றிக் காட்டுமாறே கோரிக்கை விடுத்துள்ளோம் என்று ஜே.வி.பி.யின் பாராளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

இது தொடர்பாக விஜித ஹேறத் எம்.பி.மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

வெறுமனே யுத்தத்தை மட்டுமே அளவு கோலாக வைத்து அரசாங்கத்தின் வரவு செலவு திட்டத்தை ஆதரிக்க ஜே.வி.பி.தயாரில்லை தற்போது நாட்டில் இடம் பெறும் கட்சித் தாவல்கள், பதவிப் பரிமாற் றங்கள், ஊழல் மோசடிகள் உட்பட அத்தியாசியப் பொருட்களின் விலைகள் அதிகரிப்பு, மக்கள் மீதான சுமைகள் தொடர்பாக கட்சியின் அரசியல் சபையில் ஆழமாக ஆராய்ந்தே தீர்மானத்தை மேற்கொள்வோம்.

அத்தோடு தேர்தலொன்று வருமா அல்லது வரவு செலவு திட்டம் தோல்வி கண்டால் அமையப் போகும் அரசாங்கம் பலருடையதாக இருக்கும். இவ்வாறான புதிய அரசாங்கத்தால் நாட்டின் பிரச்சினைகளை தீர்க்க முடியுமா? எவ்வாறானதொரு அரசாங்கம் அமைய வேண்டும் போன்ற விடயங்களும்விரிவாக ஆராயப்பட்டே இறுதித் தீர்மானம் எடுக்கப்படும்.

எதிர்வரும் 18ஆம் திகதி இரவு இடம்பெறும் கட்சியின் அரசியல் சபையில் வரவு செலவு திட்டத்தை ஆதரிப்பதா எதிர்ப்பதா என்ற தீர்மானம் மேற்கொள்ளப்படும் அதே வேளை யுத்த நிறுத்த புரிந்துணர்வு உடன்படிக்கையை இரத்துச் செய்ய வேண்டும். சர்வகட்சி மாநாடு கலைக்கப்பட வேண்டும். ஐ.நா.உட்பட சர்வதேச நாடுகளின் அழுத்தங்களை தடுத்து நிறுத்த வேண்டும். நாட்டின் இறைமை பாதுகாக்கப்பட வேண்டுமென அரசாங்கத்திற்கு ஜே.வி.பி. நிபந்தனைகளை விதிக்கவில்லை.

இவ்விடயங்களை நடைமுறை சாத்தியமான விதத்தில் செய்துகாட்ட வேண்டுமென்றே தெரிவித்தோம். ஆனால் பத்திரிகைகளில் நிபந்தனைகளென செய்திகள் வெளியாகியுள்ளன. அத்தோடு இவற்றை 6 நாட்களுக்குள் செய்து காட்ட முடியாது. எனவே வரவு செலவு திட்டத்தையும் மேற்கண்ட கோரிக்கைகளையும் முடிச்சுபோட வேண்டாம். (6)

# மக்கள் வங்கி அறிவித்தல்

**மக்கள் வங்கியின் பின்வரும் கிளைகளில் 31.08.2006 ற்கு முன்பு அடகு வைத்து இது வரை மீட்கப்படாத நகைகள் பின்வரும் திகதிகளில் கீழ் குறிப்பிடப்பட் டுள்ள இடங்களில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.**

| தொடர் இல. | கிளை | ஏலம் விடப்படும் திகதி | இடம் |
|---|---|---|---|
| 1 | யாழ்.பிரதான வீதி-104 | | |
| 2 | சேவை நிலையம், உரும்பிராய் | | மக்கள் வங்கி, யாழ். கன்னாதிட்டி -284 |
| 3 | சாவகச்சேரி-110 | | |
| 4 | சேவை நிலையம், கொடிகாமம் | 2007.12.01 2007.12.02 | |
| 5 | யாழ். பல்கலைக்கழகம் -162 | 2007.12.03 | |
| 6 | சேவை நிலையம், திருநெல்வேலி | 2007.12.04 2007.12.08 | |
| 7 | யாழ்கன்னாதிட்டி -284 | 2007.12.09 | |
| 8 | சேவை நிலையம் இணுவில் | 2007.12.10 | |
| 9 | யாழ்.ஸ்ரான்லி வீதி-030 | 2007.12.11 | |
| 10 | சேவைநிலையம்தமானிப்பாய் | & | |
| 11 | காங்கேசன்துறை-031 | | |
| 12 | சேவைநிலையம்தமல்லாகம் | 2007.12.12 | |
| 13 | அச்சுவேலி-107 | | |
| 14 | சங்கானை-108 | | |
| 15 | சுன்னாகம்-109 | | |
| 16 | வல்வெட்டித்துறை-141 | | |
| 17 | நெல்லியடி-106 | | |
| 18 | பருத்தித்துறை-285 | | |

அறிவித்தலின்றி திகதியை ஒத்திப் போடும் உரிமை வங்கிக்கு உள்ளது.

*உதவிப் பொதுமுகாமையாளர்*
*வடவலயம்,*
*மக்கள் வங்கி*
*பிரதேச காரியாலயம்*
*கன்னாதிட்டி வீதி*
*யாழ்ப்பாணம்*

(C/552)

# பரிசளிப்பு விழா

வடமராட்சி கல்வி வலயத்தில் 2006 தமிழ்த்தினப் போட்டி மற்றும் 2007 கணித விஞ்ஞான புதிர்ப் போட்டிகள், ஆங்கில தினப் போட்டி, சமூகக்கல்விப் போட்டி, தையல் மனைப்பொருளியல் போட்டி, திருக்குறள் மனைப் போட்டிகளில் வலய மட்டத்தில் பரிசில் பெற்ற மாணவர்களுக்கான பரிசளிப்பு விழா இம் மாதம் 22ஆம் திகதி வியாழக்கிழமை பி.ப.1 மணிக்கு வட இந்து மத்திய கல்லூரியில் நடை பெறும்.

வலய மட்டப் போட்டிகளில் முதல் 3 இடங்களைப் பெற்ற மாணவர்களுக்கான பரிசில்கள் இவ்விழாவில் வழங்கப்படவுள்ளது.

கணித விஞ்ஞான புதிர்ப் போட்டிகளில் எழுத்துக்குழு நிலைப் போட் டிகளில் அதி கூடிய புள்ளிகளைப் பெற்ற மாணவர்களுக்கும், ஏனைய போட்டிகளில் 1ஆம், 2ஆம், 3ஆம் இடத்தைப் பெற்ற மாணவர்களுக்கும் பரிசில்கள் வழங்கப்படும். ஆங்கில தினப் போட்டிகளில் மாவட்ட, மாகாண நிலைகளில் 1ஆம், 2ஆம், 3ஆம் இடத்தைப் பெற்ற மாணவர்களுக்கான சான்றிதழ்களும் வழங்கப்படும். (19)

# வெலிக்கடை சிறைச்சாலையில் தமிழ்க்கைதிகள் ஆர்ப்பாட்டம்

வெலிக்கடை சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் கைதிகள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர் தமக்கு எதிரான வழக்குகள் தொடர்பில் துரித நடவடிக்கை எடுக்குமாறு கோரி இத் தமிழ் கைதிகள் போரட்டத்தினை ஆரம்பித்துள்ளனர்.

வெலிக்கடை சிறைச்சாலையின் கூரையின் மேல் ஏறி நின்று இத் தமிழ் கைதிகள் போராட்டத்தினை மேற்கொள்கின்றனர். (6)

# மகளிர் தின நிகழ்வுகள்

ஸ்ரீபகவான் சத்தியசாயி சேவா நிலையத்தினரால் காலை 8.30 மணிக்கு மகளிர் தின நிகழ்வுகள் இன்று திங்கட்கிழமை திருநெல்வேலி, 166/5 சேர் பொன் இராமநாதன் வீதியில் அமைந்துள்ள சேவா நிலையத்தில் நடாத்தப்படவுள்ளது.

இந்நிகழ்வில் ஓங்காரம், காயத்ரீ, பிரசாந்திக் கொடியேற்றம், வேத பாரணம், திருவிளக்குப் பூஜை, அஷ்டோத்திரம்,பஜனை என்பனவும் யாழ். பல்கலைக்கழக நுண் கலைத் துறை தலைவர் கலாநிதி திருமதி ஏ.என்.கிருஷ்ண வேணியின் 'ஆன்மீக தர்மமும் பெண்களும்' எனும் தலைப்பிலான சிறப்புச் சொற்பொழிவும், இளம் மகளிர்கள் நடாத்தும் 'மனமாற்றம்' எனும் நாடகமும் அதனைத் தொடர்ந்து மகா மங்கள ஆராத்தியும், மதிய போசனமும் இடம்பெறும்.

குறிப்பு: திருவிளக்கு பூஜை செய்ய விரும்புவர்கள் குத்து விளக்கு, திரி, எண்ணெய், பூ அல்லது குங்குமம், அல்லது திருநீறு, ஒரு தட்டு என்பன கொண்டுவரும்படி சேவா நிலையத்தினர் அறிவித்துள்ளனர். (6)

# பங்களாதேஷில் புயல் தாக்கியதில் பலியானோரின் தொகை 3ஆயிரமாக உயர்வு



பங்களாதேஷ் கடலில் கடந்த சில நாட்களுக்கு முன் உருவான சிடர் புயல் ஒரிசா மேற்கு பங்களாதேஷ் மாநிலங்களை பயமுறுத்தி விட்டு பங்களாதேஷத்தை தாக்கியது. பங்களாதேஷத்தின் தெற்கு மேற்கு பகுதிகளில் 11 மாவட்டங்களை புரட்டி போட்ட இந்த புயல் 3ஆயிரம் உயிர்களை பலி வாங் கியது.

ஆயிரக்கணக்காண கிராமங்கள் இன்னும் கடல் நீர் புகுந்ததால் மூழ்கிகிடக்கின்றன.

வெள்ளம் சூழந்த பகுதிகளில் சிக்கி உள்ளவர்களுக்கு ஹெலி காப்டர் மூலம் உணவுக்பொட்டலங்கள் போடப்பட்டு வருகின்றன.

மின்சாரம், தகவல் தொடர்பு முழுமையாக துண்டிக்கப்பட்டுள்ளன.

புயல் பாதித்த பகுதிகளில் தோண்ட தோண்ட பிணங்கள் வெளியே வந்து கொண்டிருக்கின்றன.

மீட்பு பணிகள் இரவு, பக லாக நடைபெற்று வருகின்றன.

பங்களாதேஷத்தில் புயல் பாதித்தவர்களுக்காக பல்வேறு நாடுகளில் இருந்து உதவிப் பொருட்கள் குவிந்த வண்ணம் உள்ளது. மீட்பு பணிகளில் ஈடுபட மீட்பு படையினரை ஏற்றிக்கொண்டும் நிவாரண பொருட்களை ஏற்றிக் கொண்டும் 2



அமெரிக்க கப்பல்கள், பங்களாதேஷம் விரைகிறது.

# ஜனவரி மாதம் தேர்தல் நடைபெறும் வரை அவசரகால நிலை அமுலில் இருக்கும்

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானில் கடந்த 3ஆம் திகதி அவசரகால நிலையை அதிபர் முஷரப் அறிவித்தார். முக்கிய தலைவர்கள் கைது செய்யப்பட்டு வீட்டுக் காவலில் வைக்கப்பட்டனர். நெருக்கடி நிலையை எதிர்த்தும் முஷரப்பை கண்டித்தும் தடையை மீறி பேரணி நடத்த முயன்ற முன்னாள் பிரதமர் பெனாசிரும் வீட்டுக்காவலில் வைக்கப்பட்டார். அமெரிக்காவின் வற்



புறுத்தலின் பேரில் பெனாசிர் பிறகு விடுதலை செய்யப்பட்டார். அவசரகால நிலையை உடனடியாக வாபஸ் பெறும் படியும் ஜனநாயக ரீதியில் தேர்தல் நடத்தும்படியும் பெனாசிருடன் சமரசம் செய்துகொள்ளும்படியும் அமெரிக்க அதிபர் புஷ் தொடர்ந்து முஷரப்பை வற்புறுத்தி வருகிறார். ஜான் நெக்ரோபாடி என்ற தூதரையும் புஷ் பாகிஸ்தானுக்கு அனுப்பி வைத்தார். அந்த தூதர் பாகிஸ்தான் வந்து முஷரப்பை சந்தித்து பேசினார். புஷ்சின் கோரிக்கைய அவர் முஷரப்பிடம் தெரிவித்தார்.

ஆனால் புஷ் கோரிக்கையை ஏற்க முஷரப் மறுத்துவிட்டார். இந்த சந்திப்புக்குப்பிறகு முஷரப் அளித்த பேட்டியில் கூறியதாவது. அவசரகால நிலையை இப்போதைக்கு வாபஸ் பெற முடியாது சீர்குலைவை தடுக்கவும் மிக மோச மான குண்டு வெடிப்புகள் போன்றவை நடக்காமல் தடுக்கவும் நெருக்கடி நிலை அமுல் படுத்தப்பட்டுள்ளது. தீவிரவாதம் தலை தூக்குவதை அனுமதிக்க முடியாது நிலைமை சீரான பிறகு நெருக்கடி நிலை வாபஸ் பெறப்படும். ஜன நாயக ரீதியில் நேர்மையான தேர்தல் ஜனவரி மாதம் நடைபெறும். அதுவரை நெருக்கடி நிலை அமுலில் இருக்கவேண்டும். இவ்வாறு முஷரப் கூறினாா.

# புதுவித மிருகம்



சகாரா பாலைவனத்தில் சுமார் 11 கோடி ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்ததாகக் கருதப்படும் புதுவித மிருகம் இது. டினோசர் போல உருவம் இருந்தாலும் வாய்ப்பகுதி இதற்கு ரொம்ப வித்தியாசம்.

அளவில் யானையை விடப் பெரியதாக இருந்தாலும் சாப்பிடுவதில் ஆடு மாடுகளைப் போல சுத்த சைவம்தானாம் இது. சிகாகோ பல்கலைக்கழக ஆராய்ச்சிப் பிரிவு பேராசியர்கள் டைலர் கெய்லர், பால் செரேனோ ஆகியோர் இதைக் கண்டுபிடித்தனர்.

நிகெர்சாரஸ் டாகுய்டி என்று பெயரிட்டுள்ளனர். கிடைத்த ஒரு சில எலும்புகள், திசுக்களை வைத்து இந்த செயற்கை பாகுய்டியை உருவாக்கி விட்டனர். வாஷிங்டனில் நேஷனல் ஜியாகரபிக் மியூசியத்தில் அடுத்த ஆண்டு மார்ச் 8ஆம் திகதி வரை இதைக் காட்சிக்கு வைத்துள்ளனர்.

# உலக தரிசனம்

## சுற்றுச்சூழலை காக்கத்தவறினால்



(ஜகார்தா)

உலகம் முழுவதும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு குறித்த பிரசாரங்கள் நடந்தவண்ணம் தான் உள்ளன. பூமிப் பந்துபோன்ற உருவத்தை சாலையில் உருட்டியபடி வருகிறார்கள் சுற்றுச் சுழல் ஆர்வலர்கள். இந்தோனேஷியாவின் ஜகார்தா நகரில்தான் இந்தக் காட்சி.

அங்குள்ள தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறும் கார்பன் டை ஆக்ஸைடு சுற்றுச் சூழலைக்கெடுக்கிறது. இதை கட்டுப்படுத்துவதற்கான முயற்சியை மேற்கொள்ள வேண்டும் என்பதை வலியுறுத்தி இத்தகைய நூதன பிரசாரத்தை மேற்கொண்டுள்ளனர்.

சுற்றுச் சுழலைக்காக்கத் தவறினால் பூமிப் பந்தைப் போல மனிதனும் உருள வேண்டியது தான் என்பதை சொல்லாமல் சொல்கின்றனர் போலும்.

## 50 ஆண்டுப் பகை மறைந்தது



(கோசுங்)

கம்யூனிச ஆட்சி நடக்கும் வடகொரியாவும் அமெரிக்க பாணி பொருளாதாரத்தில் திளைக்கும் தென்கொரியாவும் அருகருகே இருந்தாலும் இவ்விரு நாடுகளுக்கிடையே ஏழாம் பொருத்தமாகத்தான் இருந்து வருகிறது.

ஆனால் தற்போது இவ்விரு நாடுகளுக்குமிடையே உறவு துளிர்விட ஆரம்பித்துள்ளது. இராணுவம் விலக்கிக்கொள்ளப்பட்ட வடகொரிய எல்லைப் பகுதியான கோசுங் வழியாக தென்கொரியா நோக்கிச் செல்கிறது. இந்த வடகொரிய ரயில்.

இரு நாடுகளும் அடுத்த மாதத்திலிருந்து சரக்கு ரயில் போக்குவரத்தை இயக்க பரஸ்பரம் சம்மதித்துள்ளன. ஏறத்தாழ 50 ஆண்டு காலப்பகை மறைந்து இந்த அதிசயம் நடக்கிறது.

# குண்டானகுழந்தைகளுக்கு கல்லீரல் நோய் அபாயம்

(புதுடில்லி)

குண்டு குழந்தைகளுக்கு கல்லீரல் தொடர்பான பல பிரச்சினைகள் ஏற்படலாம் என்பது தெரியவந்துள்ளது. குண்டாக இருக்கும் குழந்தைகளுக்கு கல்லீரல் அரிப்பு, கல்லீரல் புற்று நோய் உள்பட கல்லீரல் நோய்கள் ஏற்படும் வாய்ப்பு அதிகம் என்று டாக்டர்கள் எச்சரித்துள்ளனர்.

குறிப்பாக எட்டுவயது முதல் 20 வய துக்கு உட்பட்டோர் உடல் எடை அதிகமாக இருந்தால் அவர்களில் 17 சதவீதம் முதல் 40 சத வீதம் வரை கல்லீரல் நோய்க்கு ஆளாகின்றனர். மது குடிப்பவர்களுக்கு கல்லீரல் பெரிதாகி வெடிக்கும் நிலைஏற்படும். அதேபோல குண்டாக இருக்கும் குழந்தைகளுக்கும் இந்நிலை ஏற்படக் கூடும். இந்த நோய்கள் உயிருக்கே அச்சுறுத்தல் ஏற்படுத்தக் கூடியவை. டில்லிகங்காரம் மருத்துவமனைக்கு உடல்உபாதை காரணமாக வந்த குண்டாக இருக்கும் குழந்தை களில் 133 பேரில் 55 பேரிடம் நடத்திய பரிசோதனையில் அவர்கள் கல்லீரல் வீங்கி இருப்பது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

இம்மருத்துவமனைக்கு வரும் குழந்தைகளில் வாரத்துக்கு ஐந்து பேருக்கு இப்பிரச்சினை இருப்பது தெரியவந்துள்ளது. குழந்தைகளில் ஐந்து வயதுக்குட்பட்டோரில் 2சதவீதத்தினரும் 20 வயதுடையவர்களில் 10 சதவீதத்தினரும் கல்லீரல் வீக்க நோயால் பாதிக்கப்பட்டு இருப்பதும் ஆய்வில் தெரியவந்துள்ளது. வளர்ந்த பிறகு ஏற்படும் பல்வேறு உடல் பிரச்சினைகளுக்கும் நோய்களுக்கும் குழந்தையாக இருக்கும் போது குண்டாக இருப்பதே காரணம் என்பதும் தெரியவந்துள்ளது. குண்டாக இருக்கும் குழந்தைகளில் 10 பேருக்கு ஒருவர் தான் எந்த பாதிப்பும் இல்லாமல் இருக் கின்றனர். மற்ற அனைவருக்கும் ஏதாவது பாதிப்பு ஏற்படுகிறது.

# திமிங்கல வேட்டையாடும் யப்பானிய கப்பல்



(டோக்கியோ)

திமிங்கலத்தை வேட்டையாடுகிறது ஜப்பானிய கப்பல் யுஷின் மாரு. அன்டார்டிகா கடல் பகுதியில்தான் இந்த காட்சி

திமிங்கலத்தை தாக்கி கொல்வதற்காகவே சிறப்பு ஈட்டிகளை இந்த கப்பல் பயன்படுத்துகிறது. முதல் ஈட்டியே திமிலங்கலத்தை குத்தி காயப்படுத்திவிடும் அதைத் தொடாந்து மூன்று ஈட்டிகள் திமிங்கலத்துக்குள் பாயும் அதோடு திமிங்கலத்தின் கதை முடிந்துவிடும்.

விரைவில் அன்டார்டிகா கடல் பகுதியில் 1000 திமிங்கலங்களை வேட்டையாட ஜப்பான் திட்டமிட்டுள்ளது.

ஆனால் இதற்கு சர்வதேச அளவில் பல தரப்பினரும் கடுமையாக எதிர்ப்பு தெரிவித்துள்ளனர். ஆகவே திட்டத்தை தாமதப்படுத்தி வருகிறது ஜப்பான்.

# எலி-அணில் போன்ற பிராணிகளை அதன் மோப்ப சக்தியே பாதுகாக்கிறது

## ஜப்பான் விஞ்ஞானிகள் கண்டுபிடிப்பு

(ஹாங்காங்)



எலி, அணில் போன்ற கொறித்து தின்னும்பிராணிகளுக்கு அச்சஉணர்வு ஏற்பட அவற்றின் மோப்ப சக்தி தான் காரணம் என ஜப்பான் விஞ்ஞானிகள் கண்டு பிடித்துள்ளனர். ஜப்பானில் டோக்கியோ பல் கலைக் கழகத்தில் உயிரி இயற்பியல் மற்றும் உயிரிவேதியியல் துறையைச்சேர்ந்த ஹிடோஷி சகானோ மற்றும் அவரது மாணவர்கள் பல ஆண்டுகளாக இந்த விஷயம் குறித்து தீவிர ஆராய்ச்சியில் ஈடுபட்டு வந்தனர் . எலி போன்ற பிராணிகளுக்கு அச்ச உணர்வு என்பது அவற்றின் மோப்ப சக்தியால் தான் ஏற்படுகிறது. என விஞ்ஞானிகள் ஏற்கனவே கூறியுள்ளனர். ஆனால் , ஜப்பான் விஞ்ஞானிகள் முதல் முறையாகஅதை ஆதாரத்துடன் நீரூபித்துள்ளனர். எலியின் மூளை யில் மோப்ப சக்தியை உணரக் கூடிய ஆயிரம் சிறு அணுக்கள் உள்ளன. ஆனால் மனிதருக்கு இந்த வகையில்செயல்படும் அளவில் 400 அணுக்களும், செயல்படாத வகையில் 800 அணுக் களும் உள்ளன. பூனை , நரித பனிப் பகுதியில் இருக்கும் சிறுத்தை, புலி ஆகியவற்றின் சிறுநீரை மோப்பம் பிடிக்கும் எலி போன்ற பிராணிகளுக்கு அவற்றினால் தங்கள் உயிருக்கு ஆபத்து என்ற அச்ச உணர்பு ஏற்படுகிறது. அதற்கு ஏற்றவாறு அவற்றின் மூளையில் உஷார் படுத்தும் அணுக்கள் உள்ளன. இது குறித்தே ஜப்பான் விஞ்ஞானிகள் தீவிரமாக ஆராய்ச்சி செய்தனர்.

ஆராய்ச்சிக்கு இரண்டு வகையான எலிகள் பயன்படுத்தப்பட்டன. ஒரு எலிக்கு வாசனையை வகைப்படுத்தி கூறும் அணுக்கள் துண்டிக்கப்பட்டன மற்றொரு எலிக்கு மோப்ப சக்திக்கான அணுக்கள் துண்டிக்கப்பட்டு விட்டன. இதன் போது அவை பூனையின் அருகே விடப்பட்டன. இந்த ஆராய்ச்சி குறித்து ஹிடோஷி சகானோ கூறியதாவது.

வாசனையை வகைப்படுத்தி கூறும் அணுக்கள் துண்டிக்கப்பட்ட எலி தனது எதிரியான பூனையை கண்டதும் மிகவும் ஆர்வத்துடன் இருந்தது. சிறிதளவு கூட அச்ச உணர்வு இல்லை. பூனையின் காதை தொட்டு , முத்தமிட்டு, கழுத்து பகுதியில் ஏறி விளையாடி மிகவும் குஷியாக இருந்தது. மோப்ப சக்தி துண்டிக்கப்பட்ட எலியும் துவக்கத்தில் இது போன்றே அச்ச உணர்வு இல்லாமல் தான் இருந்தது. அதன் மோப்ப சக்தி மிகவும் குறைவாக இருந்ததே இதற்கு காரணம்.

ஆனால் பூனையின் சிறுநீரை அந்த எலி மோப்பம் பிடித்த அடுத்த வினாடி அச்சத்தில் உறைந்து போய் விட்டது. இறந்து போய்விடுவோம் என்ற பயம் அதனிடம் காணப்பட்டது.

எனினும் இந்த ஆராய்ச்சிக்கு முன் சம்பந்தப்பட்ட பூனைக்கு நல்ல உணவு கொடுக்கப்பட்டு அதன் பசி போக்கப்பட்டது. அதன் பிறகே எலி அருகே அது விடப்பட்டது. இல்லாவிடில் எலியைஅந்த பூனை சாப்பிட்டு இருக்கும். இதற்கு ஆதாரமாகஎலியும் , பூனையும் அருகருகே இருப்பதற்கான புகைப்படத்தையும் நாங்கள் எடுத்துள்ளோம் இவ்வாறு ஹிடோஷி சகானோ கூறினார்.

நீ எதை விழுங்க முடியும்; உன்னை எது-விழுங்க முடியும் என்பதை நீ பார்க்க வேண்டும்.
– இந்தியா

வலம்புரி

## வரவு செலவுத்திட்ட சூறாவளி வாக்கெடுப்போடு கலைந்து போகும்

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் சமர்ப்பிக்கப்பட்ட வரவு செலவுத்திட்டம் மீதான வாக்கெடுப்பு இன்று நடைபெறுகின்றது.

இலங்கையின் அரசியல் வரலாற்றில் வரவு சலவுத்திட்டம் மீதான வாக்கெடுப்பு இத்துணை தூரம் முக்கியத்துவம் பெற்றுள்ளமை இதுவே முதல் தடவையாகும்.

வரவு செலவுத்திட்டத்தை தோல்வியடைய வைப்பதில் எதிர்க்கட்சிகளின் முனைப்பு பங்களாதேஷை தாக்கிய சூறாவளியின் வேகத்தில் உள்ளது.

எதிர்க்கட்சிகளின் எதிர்ப்பைத் தாண்டி வரவு செலவுத்திட்டத்தை நிறைவேற்றி விடவேண்டுமென்பதில் அரசு காட்டும் தீவிரத்தை அமெரிக்காவைத் தாக்கிய சூறாவளிக்கு ஒப்பிடலாம்.

இந்தப் போட்டாபோட்டியில் கோடிக்கணக்கான ரூபாய்கள் கைமாறுவதும், பின்வரிசை எம்.பிக்கள் கட்சி தாவி அரசியலில் பெயரெடுப்பதும் நடந்து கொண்டே இருக்கின்றது. இந்தத் தட்டு மறிப்புக்களுக்கெல்லாம் முடிவு இன்றோடு கிடைத்துவிடும்.

வரவு செலவுத்திட்ட வாக்கெடுப்பில் அரசு வெற்றி பெற்றுவிட்டால் எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி உட்பட மங்கள சமரவீர, சிறீபதி சூரியாராச்சி ஆகியோரின் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மக்கள் பிரிவுவரை அடிபட்டுப் போகும்.

அரசுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை என்ற பேச்சு ஒத்திவைக்கப்படலாம் அல்லது ஒட்டுமொத்தமாக புறந்தள்ளப்படலாம் என்பதுடன் எதிர்க்கட்சியினர் பலர் அரசின் பக்கம் தாவிக் கொள்வர்.

அதேநேரம் எதிர்க்கட்சியினர் மீது ஏதாவது குற்றச்சாட்டுக்களை முன்வைத்து விளக்கம், விசாரணை, தடுத்துவைப்பு என்ற பழிதீர்க்கும் படலங்களும் அவசர மற்றும் பயங்கரவாத தடைச் சட்டங்கள் மூலம் நிறைவேற்றப்படும். எனவே இவற்றையெல்லாம் எதிர்கொள்வதற்கு தயாரான நிலையிலேயே எதிர்க்கட்சிகள் களமிறங்கியுள்ளன.

அதேநேரம் வரவு செலவுத்திட்டம் தோற்கடிக்கப்படுமாயின் அடுத்த கட்ட நடவடிக்கை நாடாளுமன்றத்தை கலைப்பதாக அமையும். வரவு செலவுத்திட்டம் தோற்கடிக்கப்பட்ட பின்னரும் மகிந்தவின் அரசு ஆட்சிப் பீடத்தில் இருப்பது அவ்வளவு நல்லதாக இருக்காது.

ஆகவே வரவு செலவுத்திட்டத்தின் தோல்வி ஆட்சிக் கலைப்பில் முடியுமென்பதை ஏற்றுக் கொள்ள முடியும். இதனை செய்யத் தவறும் போது எதிர்க்கட்சிகளின் நம்பிக்கையில்லாப் பிரேரணை அரங்கேறும். அந்த அரங்கேற்றம் வெற்றி பெறுமோ இல்லையோ நாட்டில் ஆர்ப்பாட்டங்கள்–போராட்டங்கள் மிக மலிவாகக் காணப்படும்.

# அரசியல் தீர்வை முன்வைக்க அரசுகள் தவறியமையே படுகொலைகளுக்கும் யுத்தத்திற்கும் அடிப்படைக் காரணம்

## காலம் தாழ்த்தாது தீர்வை முன்வைக்குமாறு 3 இடதுசாரி கட்சிகள் கூட்டாக வலியுறுத்து

(கொழும்பு)

இரு தரப்பிலும் இடம்பெறும் படுகொலைகளுக்கும் யுத்தத்திற்கும் அடிப்படைக்காரணம் வடக்கு-கிழக்கில் வாழும் தமிழ் மக்களின் தேசிய ஜனநாயக பூர்வமான அபிலாஷைகளை மதித்து அரசியல் தீர்வொன்றை முன்வைப்பதற்கு சகல அரசாங்கங்களும் தவறியமையேயாகும் என இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி, இடதுசாரி முன்னணி, ஐக்கிய சோசலிசயக் கட்சி ஆகியன இணைந்து விடுத்துள்ள கூட்டறிக்கையில் தெரிவித்துள்ளன.

பேச்சுவார்த்தை ஆரம்பிப்பதற்கான அடிப்படையாக தமிழ் மக்களின் தேசிய ஜனநாயக அபிலாசைகளை திருப்திப்படுத்தும் வகையில் இலங்கையின் சகல இனத்தவர்களும் சமூகத்தவர்களும் இந்நாட்டை சமத்துவமான பங்காளார்களாகக் கொண்டு பேதங்கள் இன்றி கௌரவமாக பாதுகாப்பாக ஜனநாயக சுதந்திரமாக வாழும் வகையில் அரசியல் தீர்வொன்றை காலம் தாழ்த்தாது முன்வைக்குமாறு அரசாங்கத்தை தாம் வலியுறுத்துவதாகவும் இவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனை இலக்கு வைத்து வேண்டுமென்றே கொலை செய்ததன் மூலம் நடைபெறும் யுத்தத்திலும் தமிழ்த் தேசிய பிரச்சினையிலும் தீர்மானகரமான நிலை ஒன்று ஏற்பட்டுள்ளது.

மஹிந்த ராஜபக்ஷவின் அரசாங்கத்திற்கு அரசியல் தீர்வில் ஆர்வம் இல்லை எனவும் மாறாக தம்மை அரசியல் ரீதியாகவும் இராணுவரீதியாகவும் நசுக்குவதற்கு முற்படுவதாகவும் தமிழீழ விடுதலைப்புலிகள் எவ்வித சந்தேகமின்றி கூறமுடியும்.

இலங்கை அரசு ஒரு போதும் தமிழ்த்தேசியத்தை அங்கீகரித்து அரசியல் தீர்வை முன்வைக்கப்போவதில்லை. மாறாக இனவாத, யுத்தவாத ஒற்றையாட்சி மேலாதிக்கத்திற்குள் தமிழ்த் தேசியத்தை அடக்குவதற்கே முற்படுகிறதுஎன்ற கருத்தும் அவ்வியக்கத்தால் மேலும் வலியுறுத்தப்படும். இது தனிநாட்டுக்கோரிக்கைக்கு மேலும் வலுவூட்டும். மகிந்த ராஜபக்ஷவின் அரசாங்கம் யுத்தத்தின் மூலம் தமது அரசியல் இருப்பை உறுதிப்படுத்திக்கொள்ள முனையும் நிலையில் அது இனவாத, யுத்தவாத தரப்பையே போசிக்கும். இரு தரப்பிலும் இடம்பெறும் படுகொலைகளுக்கும் யுத்தத்திற்கும் அடிப்படைக் காரணம் வடக்கு-கிழக்கில் வாழும் தமிழ் மக்களின் தேசிய ஜனநாயக பூர்வமான அபிலாசைகளை மதித்து அரசியல் தீர்வொன்றை முன்வைப்பதற்கு சகல அரசாங்கங்களும் தவறியமையே.

இக்கொலையைத் தொடர்ந்து தேசிய, பிராந்திய, சர்வதேச ரீதியில் கடும் எதிர்விளைவுகள் ஏற்படக்கூடும். மக்கள் மேலும் துன்பங்களை எதிர்கொள்வதோடு முழுநாடும் மேலும் அழிவுகளையும் இழப்புக்களையும் எதிர்நோக்க நேரிடும்.

இருதரப்பாலும் நாசகார அழிவு நடவடிக்கைகள் அதிகரிக்கப்படுவதானது நாட்டைப் பற்றி எரியச்செய்யும் அரசியல் பிரச்சினையை மேலும் மோசமாக்கும். இதனால் நன்மையடைய போவது ஊழல் புரியும் முதலாளித்துவ அரசியல் வர்க்கம் மாத்திரமே. இவற்றை கருத்தில் கொண்டு பேச்சுவார்த்தையை ஆரம்பிப்பதற்கான அடிப்படையாக தமிழ் மக்களின் தேசிய ஜனநாயக அபிலாசைகளை பூர்த்திசெய்யும் வகையில் இலங்கையின் சகல இனத்தவர்களும் சமூகத்தவர்களும் இந்நாட்டை சமத்துவமான பங்காளர்களாகக் கொண்டு பேதங்கள் இன்றி கௌரவமாக பாதுகாப்பாக ஜனநாயக சுதந்திரமாக வாழும் வகையில் அரசியல் தீர்வொன்றை இன்னும் காலம் தாழ்த்தாது முன்வைக்குமாறும் நாம் அரசாங்கத்தை வலியுறுத்துகிறோம்.

இவ்வாறான நியாயமான தீர்வொன்னின் மூலம் நாட்டு மக்களை இன்னல்களில் இருந்து விடுவிப்பதற்கு ஒன்றிணையுமாறு சகல அரசியல் கட்சிகளையும் அமைப்புக்களையும் நாம் கோருகின்றோம்.

இலங்கையின் கம்யூனிஸ்ட் கட்சியின் தவிசாளர் சுரேந்திர அஜித் ரூபசிங்க, இடதுசாரி முன்னணியின் பொதுச்செயலாளர் லீனஸ் ஜெயதிலக்க, ஐக்கிய சோசலிச கட்சியின் ஸ்ரீநாத் பெரேரா ஆகியோர் இவ்வறிக்கையில் கையெழுத்திட்டுள்ளனர். (அ)

# காங்கிரஸ் தலைமையின் தமிழர் விரோதப் போக்கு கண்டனம் தெரிவிக்கின்றார் பழ.நெடுமாறன்

(சென்னை)

அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் தலைமையானது தமிழர் விரோதப் போக்கை கடைபிடிக்கிறது என்று தமிழீழ விடுதலை ஆதரவாளர் ஒருங்கிணைப்புக்குழுவின் தலைவர் பழ.நெடுமாறன் கண்டனம் தெரிவித்துள்ளார்.

சென்னையில் நேற்று ஞாயிற்றுக்கிழமை அவர் வெளியிட்ட அறிக்கையில்,

விடுதலைப்புலிகளின் அரசியல் பிரிவுப் பொறுப்பாளர் பிரிகேடியர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்கள் மறைவிற்கு இரங்கல் தெரிவித்து தமிழக முதல்வர் கருணாநிதி கவிதை எழுதியது காங்கிரஸாரின் உணர்வுகளை காயப்படுத்துவதாகும் என்று அகில இந்திய காங்கிரஸ் குழு நிறைவேற்றிய தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஒருவரின் மறைவிற்கு இரங்கல் தெரிவிப்பதே காங்கிரஸாரின் உணர்வுகளை புண்படுத்துவதாகும் என்று சொன்னால் இந்திய இராணுவத்தை இலங்கைக்கு அனுப்பி ஏழாயிரத்திற்கும் மேற்பட்ட தமிழர்களை படுகொலை செய்த நிகழ்ச்சி ஆறு கோடி தமிழ் மக்களின் உள்ளங்களில் என்றும் நீங்காத வடுவாகப் பதிந்துள்ளது என்பதைக் காங்கிரஸ் கட்சி இன்னமும் உணரவில்லை.

பொற்கோவில் மீது இந்திய இராணுவ நடவடிக்கையின் போதும் இந்திரா காந்தி மறைவிற்குப் பிறகு டில்லியிலும் பிற இடங்களிலும் ஆயிரக்கணக்கான சீக்கியர்கள் கொன்று குவிக்கப்பட்டதற்காக காங்கிரஸ் தலைவி சோனியா காந்தியும் பிரதமர் மன்மோகன்சிங்கும் காலம் கடந்தேனும் பகிரங்கமாக வருத்தம் தெரிவித்தார்கள்.

ஆனால் ஈழத்தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டதற்கு இதுவரை வருத்தம் தெரிவிக்க இருவரும் முன்வராததோடு திட்டமிட்டு ஈழத்தமிழரை இனப்படுகொலை செய்து வரும் சிங்கள அரசுக்கு கொலை ஆயுதங்களை இந்திய அரசு அளித்து வருகிறது.

இதெல்லாம் தமிழர்களின் உள்ளங்களை எந்த அளவுக்குப் புண்படுத்தும் என்பதை காங்கிரஸ் தலைமை கொஞ்சமும் உணரவில்லை.

வெந்த புண்ணில் வேலை பாய்ச்சுவதைப் போல மேலும் மேலும் தமிழர்களைப் புண்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டுள்ள காங்கிரஸ் கட்சியை வன்மையாகக் கண்டிக்கின்றேன் என்று அதில் பழ.நெடுமாறன் தெரிவித்துள்ளார். (அ-5)

# விடுதலைப் புலிகளின் பதுங்கு குழிகளை தாக்கியழிக்கும் குண்டுகள் கொள்வனவு

## 10 நாட்களில் இலங்கை வந்தடையுமாம்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினர்களின் பதுங்கு குழிகளை தாக்கியழிக்கும் குண்டுகளை அரசாங்கம் கொள்வனவு செய்திருப்பதாகவும் பத்து நாட்களில் அவை இலங்கை வந்தடையும் என்றும் கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

கொழும்பிலிருந்து வெளியாகும் த நேசன் வார ஏடு இது குறித்து எழுதியுள்ளதாவது,

விடுதலைப் புலிகளின் அடையாளங் காணப்பட்ட இலக்குகளை தாக்கியழிப்பதற்கு தயங்க வேண்டாம் என வான் படையினருக்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கட்டளையிட்டுள்ளார். இது ஒக்டோபர் மாதம் 22 ஆம் திகதி நடைபெற்ற அநுராதபுரம் வான்படைத்தளம் மீதான தாக்குதல்களைத் தொடர்ந்து நடைபெற்ற பாதுகாப்புச்சபை கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் பதுங்கு குழிகளை தாக்கியழிக்கும் குண்டுகள் மட்டுப்படுத்தப்பட்டதாகவே உள்ளன. வான் படையினர் அவற்றை விரைவில் கொள்வனவு செய்யவுள்ளனர்.

எதிர்வரும் பத்து நாட்களில் அவை இலங்கை வந்தடைந்ததும் விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினர்கள் மீதான தாக்குதல்களை வான் படையினர் நடத்தலாம்.

நவம்பர் 18 ஆம் திகதி (நேற்று) தனது 62 ஆவது பிறந்த நாளை கொண்டாடிய மகிந்த ராஜபக்ஷவிற்கு நாளையும் (இன்று) முக்கிய நாளாகும். அவர் பதவிக்கு வந்து 3 ஆவது ஆண்டு தொடங்குகின்றது. அன்றுதான் வரவு செலவுத்திட்டம் மீதான வாக்கெடுப்பு நடைபெறவுள்ளது.

அடுத்த வாரம் விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் 53. ஆவது பிறந்த நாள் வருவதும் அதற்கு மறுநாள் அவர் உரையாற்றவுள்ளதும் குறிப்பிடத்தக்கது என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-5)

## இலங்கையில் பாகிஸ்தான் போர்க் கப்பல்

(கொழும்பு)

இலங்கையில் பாகிஸ்தானிய போர்க் கப்பல்கள் முகாமிடவுள்ளதாக இலங்கைக்கான பாகிஸ்தானிய தூதரகம் தெரிவித்துள்ளது. எதிர்வரும் சில நாட்களில் பாகிஸ்தானிய போர்க்கப்பல்களான சார்ஜஹான் மற்றும் நாசர் ஆகிய இரு கப்பல்களும் நல்லெண்ணப் பயணமாக இலங்கைக்கு வரும் என்றும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)

# ★ தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு ★

# தமிழக அரசியல் செயற்பாடுகள் வாய்ப்பான சூழலை உருவாக்கிறது

## புலிகளின் முக்கிய உறுப்பினர் பாலகுமாரன் உரை

(கிளிநொச்சி)

தமிழக அரசியல், விடுதலைப்போராட்டத்திற்கு வாய்ப்பான சூழலை உருவாக்கிவருகின்றது என விடுதலைப்புலிகளின் முக்கிய உறுப்பினர் க.வே.பாலகுமாரன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சியில் நடைபெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில் கூறியதாவது,

மாவீரர்களின் ஈகங்கள் காரணமாக எமது விடுதலைப் பயணம் பெரும் இடர்களைத் தாண்டி வெற்றி நோக்கி நகர்ந்து கொண்டிருக்கின்றது. எமது விடுதலைப் போராட்டம் இன்று ஒரு திருப்பு முனையான கால கட்டத்தில் நிற்கின்றது.

எதிரிகள் தூக்கமின்றி உள்ளனர். மகிந்த ராஜபக்ஷ தனது ஆட்சியின் பலாபலன்களை அனுபவிக்கும் காலம் நெருங்கி வருகின்றது. இந்திய - தமிழக அரசியல் எமது விடுதலைப் போராட்டத்திற்கு வாய்ப்பான சூழலை உருவாக்கி வருகின்றது.

எமது விடுதலையை விரைவில் வென்றெடுக்க வேண்டிய நிலையில் தமிழினம் உள்ளது. மாவீரர்களைத் தொடர்ந்து விதைக்க முடியாது. விடுதலையை வென்றெடுக்க அனைவரும் மாவீரர்களின் கனவு சுமந்து அணி திரள்வோம் என்றார் அவர். (ச)

## வரவு-செலவுத்...

கூட்டமைப்பு எம்.பிக்களும் பங்குபற்றுவார்களா? எனக் கேட்கப்பட்ட போதே அவர் இவ்வாறு கூறினார். இது குறித்து அவர் மேலும் கூறியதாவது;

வரவு-செலவுத் திட்டத்தினை 22 எம்.பிக்களும் ஒன்றிணைந்து எதிர்ப்பதென முடிவு செய்யப்பட்டுள்ளது. வெளிநாடுகளில் தங்கியிருந்த எம்.பிக்களும் நாடு திரும்பியுள்ளனர். ஜே.வி.பியின் முடிபினை பொறுத்தே வரவு-செலவுத் திட்டத்தின் எதிர்காலம் தங்கியுள்ளது. அது குறித்து நாம் அக்கறை கொள்ளவில்லை.

நாம் வரவு-செலவுத் திட்டத்தினை எதிர்ப்போம். வரவு-செலவுத் திட்டத்திற்கு என்ன நடந்தாலும் எமக்குக் கவலையில்லை என்றார். (ச)

## அரசுடன்...

மேற்கண்டவாறு தெரிவித்தனர். வரவு செலவுத்திட்டம் மீதான வாக்கெடுப்பு தொடர்பில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் உறுதியான முடிபெதனையும் எடுக்கவில்லை. நாம் அரசாங்கத்துடன் இணைந்திருந்தாலும் களநிலைமைகளை கருத்தில் கொண்டு தீர்க்கமான முடிபினை இன்று எடுப்போம் என்று இ.தொ.கவின் பிரதித் தலைவரும் பிரதி அமைச்சருமான முத்து சிவலிங்கம் தெரிவித்தார்.

### முஸ்லிம் காங்கிரஸ்

வரவு செலவுத்திட்ட வாக்கெடுப்பு தொடர்பில் இன்னமும் தீர்க்கமான முடிபொன்றினை எமது கட்சி எடுக்கவில்லை. இன்று காலையே முடிபினை எடுக்கவுள்ளோம் என்று சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் செயலாளரும் பிரதி அமைச்சருமான ஹசன் அலி தெரிவித்தார்.

### மலையக மக்கள் முன்னணி

அரசாங்கத்துடன் நாம் இணைந்திருந்தாலும் வரவு செலவுத் திட்ட வாக்கெடுப்பு தொடர்பில் களநிலைமைகளை கருத்தில் கொண்டே மலையக மக்கள் முன்னணி முடிபு எடுக்கும். இன்று காலையில் முடிபு மேற்கொள்ளப்படும் என்று ம.ம.முவின் செயலாளர் எஸ். விஜயகுமாரன் கூறினார். (ச)

## வாக்கெடுப்பின்...

தெரிவித்தார்.

வாக்கெடுப்பு தொடர்பில் நாம் எடுத்துள்ள முடிபினை தற்போது அறிவிப்பதானது சதித்திட்டங்களுக்கு வழிகோலிவிடும். அதனால் தான் முடிபினை நாம் பகிரங்கப்படுத்தவில்லை என்றும் அவர் கூறினார்.

வரவு செலவுத்திட்ட வாக்கெடுப்பில் ஜே.வி.பி எத்தகைய நிலைப்பாட்டினை கையாளப் போகிறது என்று கேட்டபோதே விஜித்த ஹேரத் எம்.பி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அரசாங்கத்தின் வரவு செலவு த்திட்டத்தை ஆதரிப்பதா?எதிர்ப்பதா? அல்லது வாக்கெடுப்பின் போது வெளிநடப்புச் செய்வதா என்பது தொடர்பிலான ஜே.வி.பியின் நிலைப்பாடு இன்றைய நாடாளுமன்ற வாக்கெடுப்பின் போதே வெளிப்படுத்தப்படும்.

வரவு செலவுத் திட்டம் தொடர்பாக ஜே.வி.பியின் நிலைப்பாடு எவ்வாறு அமையவேண்டுமென்பது தொடர்பாக அரசியல் சபை கூடித் தீர்மானம் எடுத்துள்ளது.

அதனை இப்போது வெளியிடமாட்டோம். காரணம் வெளியிடப்பட்டால் சதித்திட்டங்களுக்கு உதவியாக அமைந்து விடும். எனவே இன்றைய நாடாளுமன்ற கூட்டத்தொடரில் எமது எம்.பிக்கள் அனைவரும் கலந்து கொள்வார்கள். வரவு செலவுத் திட்டம் தொடர்பில் வாக்கெடுப்பு நடத்தப்படும்போது எமது நிலைப்பாடு வெளிவரும் என அவர் மேலும் கூறினார். (ச)

## மட்டக்களப்பு எம்.பிக்கள்...

பாதுகாப்பு நீக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

குறிப்பிட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் அச்சுறுத்தல்கள் காரணமாக நீண்டகாலமாக கொழும்பிலேயே தங்கியிருக்கின்றார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை அரசாங்கத்தின் வரவு-செலவுத் திட்டத்தை எதிர்த்துத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் வாக்களித்தால் அனைவரும் படுகொலை செய்யப்படுவார்கள் என்று அச்சுறுத்தல் விடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதன் முதற்கட்டமாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான தங்கேஸ்வரி கதிர்காமன், ரி.கனகசபை, பி.அரியநேந்திரன் ஆகியோரது பாதுகாப்புக்களை மகிந்த ராஜபக்ஷ விலக்க உத்தரவிட்டுள்ளதாகக் கூறப்பட்டது.

மட்டக்களப்பிலுள்ள தங்கேஸ்வரி கதிர்காமனின் முதன்மைப் பாதுகாப்பு அலுவலகத்திலிருந்து பாதுகாப்பு விலக்கப்பட்ட உடனேயே ஐந்துபேர் அடங்கிய குழு மோட்டார் சைக்கிளில் வந்து அங்கிருந்த தங்கேஸ்வரி கதிர்காமனின் செயலாளரை உயிரோடு எரித்து விடுவோம் என்று பகிரங்கமாக எச்சரிக்கை விடுத்துள்ளது.

மேலும் ரி.அரியநேந்திரனின் பிள்ளைகளைக் கடத்துவோம் என்றும் அச்சுறுத்தியுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது. இதனையடுத்து மட்டக்களப்பிலுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மற்றொரு நாடாளுமன்ற உறுப்பினரான ரி.கனகசபையின் வீட்டுக்குள் நேற்றுப் பிற்பகல் 2.30 மணியளவில் அத்துமீறி உள் நுழைந்த குழுவொன்று அவரது மருமகனான ஆசிரியராகப் பணிபுரியும் எஸ். சஜிதரனை (வயது-37) கடத்திச் சென்றுள்ளது.

மகிந்த ராஜபக்ஷவுக்கு எதிராக ரி.கனகசபை வாக்களித்தால் எஸ்.சஜிதரன் கொல்லப்படுவார் என்றும் எச்சரிக்கை விடுத்துச் சென்றுள்ளது. இதனிடையே முல்லைத்தீவு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கனகரத்தினத்தின் உயிருக்கு ஆபத்து ஏற்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. (எ-5)

## ஜே.வி.பி...

இடம்பெறும் வரவு-செலவுத் திட்டத்தின் முதற்கட்ட வாக்கெடுப்பில் அரசாங்கம் நிச்சியம் வெற்றி பெறும். அது உறுதிப் படுத்தப்பட்டு விட்டது.வரவு-செலவுத்திட்டத்திற்கு ஆதரவாக 118 வாக்குகள் இருக்கின்றன. எதிராக அதாவது ஐ.தே.கட்சியும் ஜே.வி.பியும் தமிழ்க் கூட்டமைப்பும் இணைந்து எதிர்த்தாலும் தோல்வியடையச் செய்ய முடியாது. அவர்களுக்கு மொத்தம் 106 வாக்குகளே இருக்கின்றன.

எனவே அரசாங்கம் 12 அதிகப்படியான வாக்குகளால் வரவு-செலவுத் திட்டத்தை வெற்றி கொள்ளும். ஜே.வி.பி. எதிர்த்தாலும் இந்த வெற்றியை தடுக்க முடியாது. வரவு-செலவுத் திட்ட வெற்றிக்குப் பின்னர் மேலும் பல ஐ.தே.கட்சி உறுப்பினர்கள் அரசுடன் இணையவுள்ளனர் என்றார். (ச)

## இராணுவத்...

வரவேற்றார்.

அதன் பின்னர் வன்னி கூட்டுப் படைத் தலைமையகத்தில் பாதுகாப்பு நிலைமைகளை ஆய்வு செய்யும் கூட்டம் நடைபெற்றது.

அக்கூட்டத்தில் வன்னிக் களமுனையின் அனைத்து தளபதிகளும் பாதுகாப்பு முன்னேற்பாடுகள் குறித்து சரத் பென்சேகாவுக்கு விளக்கினர். இக்கூட்டத்தில் புதிய பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து சரத் பென்சேகா அறிவுரை வழங்கியதாக தெரிகிறது. (ச-5)

## தமிழ்த்...

பா.நடேசன் கரிசினையும் அதிர்ச்சிக்கு உள்ளாகி இருப்பதையும் நோர் வேக்கும் கண்காணிப்புக் குழுவுக்கும் புலித்தேவன் எடுத்து விளக்கியுள்ளார்.

இது குறித்து விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலகம் விடுத்துள்ள அறிக்கையில், கடந்த காலத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் இரு நாடாளுமன்ற உறுப்பினர்களின் கொலைக்கு எந்தவொரு நடவடிக்கையையும் சர்வதேச சமூகம் எடுக்கத் தவறிய தன் விளைவே தற்போது உயிர் அச்சுறுத்தல் அபாயத்தை எதிர்நோக்க வேண்டியுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## அரசுக்கும் எதிர்க்கட்சிகளுக்குமிடையில்...

இரு தரப்புக்குமிடையிலான பலப் பரீட்சையின் பிரதான துரும்புச் சீட்டாக இன்று ஜே.வி.பி. திகழ்கின்றது. வரவு-செலவுத் திட்டத்தினை ஜே.வி.பி. எதிர்த்தால் மாத்திரமே எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியின் முயற்சி வெற்றியளிப்பதற்கான சந்தர்ப்பங்கள் உள்ளன.

வரவு-செலவுத் திட்டத்தினை ஜே.வி.பி. ஆதரித்தாலோ அல்லது வாக்களிக்காமல் கலந்து கொள்ளாது வெளிநடப்புச் செய்தாலோ ஐக்கிய தேசியக் கட்சியின் முயற்சி வெற்றி பெறமாட்டாது.

ஆனால் வரவு-செலவுத் திட்டத்தினை எதிர்க்கப் போகின்றோமா? ஆதரிக்கப் போகின்றோமா? அல்லது வெளிநடப்புச் செய்யப் போகின்றோமா? என்பது தொடர்பாக ஜே.வி.பி. இதுவரை உறுதியான தீர்மானத்தை பகிரங்கமாக அறிவிக்கவில்லை.

அரசாங்கத்திற்கு இ.தொ.க., முஸ்லிம் காங்கிரஸ், மலையக மக்கள் முன்னணி, ஹெல உறுமய ஆகிய கட்சிகளின் ஆதரவுடன் 118 பேரின் வாக்குகள் உள்ளன. இந்நிலையில் ஐக்கிய தேசியக் கட்சி, ஜே.வி.பி., தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆகிய மூன்று கட்சிகளும் ஒன்றிணைந்து வரவு-செலவுத் திட்டத்தினை எதிர்த்தால் 106 வாக்குகள் கிடைக்கும்.

வரவு-செலவுத் திட்டத்தினை ஜே.வி.பி. எதிர்த்தாலும் அதனைத் தோற்கடிப்பதற்கு அரசாங்கத் தரப்பிலிருந்து இன்னமும் 7 உறுப்பினர்களின் ஆதரவினை எதிர்க்கட்சிகள் பெற வேண்டும்.

ஜே.வி.பியின் இன்றைய முடிபினை பொறுத்தே கட்சித் தாவல்கள் இடம்பெறலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. வரவு-செலவுத் திட்டத்தினை ஜே.வி.பி.எதிர்க்குமானால் அரசாங்கத்தரப்பிலுள்ள எம்.பிக்கள் சிலர் எதிர்த் தரப்பிற்கு மாறலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இதற்கான பேச்சுவார்த்தைகளில் அரச தரப்பு எம்.பிக்களுடன் ஐ.தே.க. முக்கியஸ்தர்கள் ஈடுபட்டுள்ளனர்.

### ஜனாதிபதியின் முடிபு

வரவு-செலவுத் திட்டத்தில் அரசாங்கம் தோற்குமானால் நாடாளுமன்றத்தினைத் தான் கலைக்கப் போவதில்லை என்றும் அடுத்ததாக எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை ஆட்சியமைக்க அழைக்கவுள்ளதாகவும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் ஆட்சி அமைக்க வராது விடத்து ஜே.வி.பிக்கு அழைப்பு விடுக்கப்படும் என்றும் அவர் கூறினார். காலஞ்சென்ற முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தனவின் பாரியாரின் மரண வீட்டில் நேற்று முன்தினம் ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும் சந்தித்துள்ளனர்.இதன்போதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்ததாகக் கூறப்படுகின்றது.

### ரணிலின் எண்ணம்

ஆனால் வரவு-செலவுத் திட்டம் தோற்கடிக்கப்படும் இடத்து நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு மக்களின் புதிய ஆணை பெறப்பட வேண்டுமென எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க எடுத்துக் கூறியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

### ஐ.தே.க. எம்.பிக்களுக்கு வலைவிரிப்பு

வரவு-செலவுத் திட்டத்தை காப்பாற்றிக் கொள்ளும் வகையில் ஐ.தே.க. எம்.பிக்களை அரசுத் தரப்புக்கு மாற்றுவதற்காக பேரம் பேசல்கள் நேற்று தொடர்ந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இது இவ்வாறிருக்க ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்தினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள 2008 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டம் நிறைவேற்றப்பட்டால் அமைச்சரவையில் மீண்டும் மாற்றங்களை மேற்கொள்வதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக நம்பகரமான வட்டாரங்களிலிருந்து தெரியவருகின்றது. (ச)

## வரவு-செலவுத் திட்டம்...

நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலர் தயார் நிலையில் உள்ளனர். இதனால் அரசாங்கம் அச்சத்துடனேயே நேரத்தை கடத்துகின்றது. பிரதான எதிர்க்கட்சி என்ற வகையில் வரவு செலவுத் திட்டத்தை தோற்கடிப்பது என்ற உறுதியான நிலைப்பாட்டுடன் நாம் செயற்படுகின்றோம்.

வரவு செலவு திட்டத்திற்கு ஆதரவாக மனசாட்சியுள்ள எவராலும் வாக்களிக்க முடி யாது இதனாலேயே வரவு செலவு திட்டத்தை தோற்கடிப்பது என ஐக்கிய தேசியக் கட்சி தீர் மானித்துள்ளது.

இதனடிப்படையில் வரவு செலவுத்திட்டம் இன்று நாடாளுமன்றத்தில் தோற்கடிக்கப் படும்; அரசாங்கமும் கவிழ்க்கப்படும். இதற் கான சகல நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன என்றார். (ச)

பல தசாப்தங்களைக் கடந்து இன்றும்
'சிறந்த கல்வி, கண்டிப்புடன் கூடிய கட்டுப்பாடு, மேலான பெறுபேறு, உன்னத சேவை' என்ற இலக்குடன்
☆ புதிய கல்வி ஆண்டு - 2008
❖ தரம் 1 முதல் O/L வரையான வகுப்புகள்
ஆரம்பம்:- 07-12-2007 வெள்ளி 3.30 P.M
புதிய அனுமதிகளை இன்று முதல் பதிவு செய்யலாம்
நாவலர்
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்
(C-554)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.1 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 18.11.2007 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.